No:55:10 Price: Rs.10.00

Herald of Deliverance

விடுதலைத் தூதன்

"Speak evil of no man" - Titus3:2 " Follow peace with all men"-Hebrews12:14

OCTOBER 2011

எரேமியாவின் பயனுள்ள ஊழியம்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

ஆசிரியர் உரை...

அன்பான நூதன் வாசகர்களுக்கு,

எனது இதயங்கனிந்த அன்பின் வாழ்த்துதல்கள்.

இயேசுவின் வருகை மிக மிக சமீபம் என்பதை நாளேடுகளின் சம்பவங்க அனுதினமும் உறுதிப்படுத்தி வருகின்றன.

"ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பு பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகு இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்" (மத்தேயு 24:7,8).

மேற்காணும் சம்பவங்களைத் தொலைக்காட்சியும், நாளேடுகளும் அனுதினமு விளக்கிவருகின்றன. சிலநாட்களுக்குமுன் இந்தியாவின் தலைநகரின் நீதிம வளாகத்தின் முன்பு நடந்த குண்டுவெடிப்பு சம்பவத்தால் அநேக மக்களின் உயிரிழப் குறித்தும், காயங்கள்குறித்தும் கேள்விப்பட்டோம். லிபியா நாட்டின் குடியரசாட்சியி கலவரத்தால், அங்குச் சமாதானமற்ற நிலை காணப்படுகின்றது.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சி காணப்படுகின்றது சமீபத்தில் அத்தேசத்தில் ஏற்பட்ட சூறாவளியால் பெருஞ்சேதம் விளைந்ததை தொலைக்காட்சிச் செய்திகள் விளக்கின. ஜப்பான் நாட்டில் நிலநடுக்கம், சுனா இவற்றினால் பேரழிவு ஏற்பட்டதை நாம் தொலைக்காட்சிவாயிலாகக் கண்கூடாக கண்டோம். சோமாலியா நாட்டில் பஞ்சம் சிறியோரையும் பெரியோரையும் வாட் வருவதை இப்போதும் காண்கிறோம்.

எங்கும் ஊழலுக்கு எதிராக நடைபெற்றுவரும் போராட்டங்களின் விளைவுகளை கண்கூடாகவும், நாளேடுகளின்வாயிலாகவும் அறிந்துவருகிறோம். ஆகவே தேவபிள்ளைகள் செய்யவேண்டியது என்ன?

"என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால்,... நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்" (2 நாளாகமம் 7:14) என்னும் வசனத்திற்கிணங்க நாம் நம்மைத் தாழ்த்தி, திறப்பின் வாயில் நின்று, உலகின் தேசங்களுக்காக ஊக்கமாக ஜெபிப்போம். நினிவே பட்டணத்தார் செய்ததுபோல உபவாசித்து ஜெபிப்போம். தேவன் தமது உக்கிரமான கரத்தை தேசங்களைவிட்டு விலக்கும்படி அவரோடு போராடுவோம். அப்போது, கர்த்தர் தமது மக்களின் பெருமூச்சைக் கேட்டருளுவார்.

அடுத்து, நமது பிள்ளைகளின் கல்விக்காக அனுதினமும் நாம் ஊக்கமா ஜெபிப்போம். தங்கள் பாடங்களில் அவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெற்று தேர்ச்சிபெற, குடும்பமாகப் போராடுவோம்.

நமது குடும்பமும், தேசமும் கிறிஸ்துவை உயர்த்திக்காட்டவும், அநேகர அவர்பக்கமாக ஈர்க்கவும், தேவபிள்ளைகள் நற்சாட்சியோடு வாழட்டும். தே பிள்ளைகளின்வாயிலாகக் கிறிஸ்து வெளிப்படுவாராக. தேசங்கள் இயேசுவை ஏற் சேமத்துடன் வாழ வழிகோலுவோம்.

தேவன்தாமே உங்களுக்கு ஏற்ற கிருபைகளைத் தந்தருளுவாராக.

அன்புள்ள

R. K. Sam

எரேமியாவின் பயனுள்ள ஊழியம்

போதகர் எம்.கே.சாம் சுந்தரம்

இயேசுவை அறிந்த தேவனுடைய ...கள் அவருக்குப் பிரியமாகவும், ...குப் பயனுள்ளவர்களாகவும், முழுமன... அவரைச் சேவிக்கிறவர்களாகவும் ...வேண்டியது அவசியம். இன்றேல், ...து இரட்சிப்பு பயனற்றதே. இயேசு ...துவினால் பாவமன்னிப்பைப் பெற்று, ...நானம் எடுத்த பிள்ளைகள் யாவரும் ...கள் என்ற பிரிவில்மட்டும் சேர்ந்தவர்கள் ... 1 பேதுரு 2:9 இன்படி அவர்கள் ...ரும் ஆவர். விசுவாசிகள் அனைவரும் ...வுக்குச் சேவைசெய்யும் முழுநேர ...ராகவே மதிக்கப்படுவர். எனவே, ...பதி விசுவாசிகளுக்கும் ஏற்புடையது.

எரேமியா ஊழியர்களுக்கோர் சரியான ...காட்டாக விளங்குபவன். எரேமியா ... தீர்க்கதரிசி என்று வேத சாஸ்திரிகள் ... எரேமியா முதலாம் அதிகாரத்தை ... வாசித்தாலே அவனது ஊழியப் ...புகள் அனைத்தையும் ஒருங்கே நாம் ...டறியமுடியும்.

"பென்யமீன் தேசத்திலுள்ள ஆனதோத் ...லிருந்த ஆசாரியர்களில் ஒருவனாகிய ...க்கியாவின் குமாரன் எரேமியாவினுடைய ...கள்" (எரேமியா 1:1):

எரேமியா ஓர் ஆசாரியன் என்பதை ...சனம் நன்கு தெளிவுபடுத்துகின்றது. ...து சிறப்பு ஊழியம் தீர்க்கதரிசனம் கூறுதல் ... "எரேமியா" என்ற சொல்லுக்கு, ...வனால் நியமிக்கப்பட்டவன்" என்பது ...ள். ஆம், தேவனுக்கு ஊழியஞ்செய்ய ...புகிற நாம் அனைவரும் தேவனால் ...க்கப்பட்டவர்கள்தான் என்பதை அறிந்து ...ளுவோமாக.

உலகின் அலுவலகங்களில் பலரும் பணி நியமனம் செய்யப்படுவதற்குரிய கட்டளையைப் பெறுவது இயல்பு. எரேமியாவும் தேவனுடைய வேலையைச் செய்வதற்காக, தேவனால் கட்டளைபெற்று நியமிக்கப்பட்டவனாவான். இஸ்ரவேல் மக்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்வதற்காக, கர்த்தர் அவனை நியமித்தார். எரேமியா இதனை எண்ணி மிகவும் களிகூர்ந்திருப்பான்.

அன்பானவர்களே! தேவனுக்குத் தொண்டுசெய்யவே நாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு, நியமிக்கப்பட்டுள்ளோம். இப்பாக்கியம் கிட்டியதற்காக நாம் தேவனை ஸ்தோத்திரிக்கவேண்டும். மட்டுமன்றி, இப்பணியின் உத்திரவாதத்தை நாம் அறிந்து செயல்படவேண்டும். தேவனுடைய உத்திரவாதத்தை உணருவோமானால், தேவ பயம் நம்மைப் பற்றிப் பிடிக்கும்.

எரேமியா முதலாம் அதிகாரத்தில் அவனது ஊழியத்தைக் குறித்துள்ள ஏழு பண்புகளைக் காணலாம். அவனிடம் தெய்வீக வார்த்தை காணப்பட்டது, அவன் தெய்வீக அழைப்பைப் பெற்றவன், அவன் தெய்வீக தொடுதலைப் பெற்றவன், அவன் தெய்வீக வேலையைப் பெற்றவன், தெய்வீக தரிசனத்தைப் பெற்றவன், தெய்வீக செய்தியை உடையவன், அவன் தெய்வீக பாதுகாப்பைப் பெற்றவன். இவற்றைக் கீழே விளக்கமாகக் காண்போம்.

தெய்வீக வார்த்தைகளைக் கொண்ட எரேமியா

"ஆமோனுடைய குமாரனாகிய யோசியா என்கிற யூதாவுடைய ராஜாவின் நாட்களில், அவன் அரசாண்ட பதின்மூன்றாம் வருஷத்தில்

இவனுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று" (எரேமியா 1:2).

"கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று" (எரேமியா 1:3).

"பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி" (எரேமியா 1:11),

"கர்த்தருடைய வார்த்தை இரண்டாந் தரம் எனக்கு உண்டாகி" (எரேமியா 1:13),

மேற்காணும் வசனங்கள் அனைத்தின் வாயிலாகவும், எரேமியா தேவனுடைய வார்த்தைகளை எப்போதும் பெற்றிருந்தவன் என்பதை அறியமுடிகிறது. ஆம், விசுவாசிகளும் ஊழியரும் எப்போதும் தெய்வீக வார்த்தைகளால் நிறைந்து காணப்படவேண்டும். மற்றவர்களுக்குப் போதிக்கும் நேரங்களில் விசுவாசிகளோ, அன்றி ஊழியரோ தங்கள் மனம்போன போக்கில் பிரசங்கிப்பது நன்மை பயக்காது. "அவர் தன் வாய்க்கு வந்தபடியெல்லாம் உளறுவார்" என்று மற்றவர்கள் நம்மைக்குறித்துப் பரிகசிக்கும் வகையில் நமது வார்த்தைகள் அமைதல்கூடாது.

தேவனுடைய வார்த்தைகள் நிறைந்து காணப்படும் இடங்களில்தான் மக்கள் கூடிவருவர். பெரிய கட்டடத்தைக் கண்டோ, திரள்கூட்ட மக்களைக் கண்டோ தேவ வசனத்தைக் கேட்க மக்கள் ஆலயத்திற்கு வருவது இல்லை. ஆகவே, தேவனுடைய வார்த்தைகளைப் பெற்று நிரம்பிக் காணப்பட, தேவனுடைய பிள்ளைகள் எப்போதும் அவரது பாதத்தில் நீண்ட நேரம் காத்திருக்கவேண்டும்.

இஸ்ரவேல் இராஜாவான யோராமின் காலத்திலே மோவாபின் இராஜா இஸ்ரவேலுக்கு விரோதமாகப் படையெடுத்துவந்தான். யூதா இராஜாவான யோசபாத்தும் இஸ்ரவேல் இராஜாவுக்குத் துணைநின்று, அவனோடு சேர்ந்து யுத்தத்துக்குச் சென்றான். இருவரும் ஏதோம் தேசத்தின் வழியாய் ஏழுநாள் பயணம் சென்றபோது, அவர்களது இராணுவத்திற்கும், மிருகஜீவன்களுக்கும் தண்ணீரில்[...] போயிற்று.

"அப்பொழுது யோசபாத்: கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி கர்த்தரு[...] தீர்க்கதரிசி ஒருவரும் இங்கே இல்லையா[...] கேட்டதற்கு, எலியாவின் கைகளு[...] தண்ணீர் வார்த்த சாப்பாத்தின் குமாரன[...] எலிசா இங்கே இருக்கிறான் என்று இஸ்ர[...] ராஜாவின் ஊழியக்காரரில் ஒருவன் மறு[...] யாகச் சொன்னான். அப்பொழுது யோச[...] அவனை நோக்கி: கர்த்தருடைய வார்[...] அவனிடத்தில் இருக்கிறது என்றா[...] (2 இராஜா.3:11,12).

"கர்த்தருடைய வார்த்தை அவனிட[...] இருக்கிறது" என்று யோசபாத் கூறினது இ[...] குறிப்பிடத்தக்கது. கர்த்தருடைய வார்த்தை[...] எலிசா கூறினதினால் தேவ பிள்ளைகளுக்[...] அவர்களுடைய மிருகஜீவன்களுக்கும் தண்[...] கிடைத்தது. அவர்கள் ஜீவனைப் பெற்[...] போருக்குச் சென்று பகைவரை வென்றா[...] தேவ பிள்ளைகளுக்கு ஜீவனாயிருந்த அ[...] தண்ணீர், அவர்களது மாற்றாருக்கோ அழி[...] உண்டாக்கிற்று.

ஆம், அன்பானவர்களே! உங்களுடை[...] வாயில் கர்த்தருடைய வார்த்தை[...] இருக்கிறதா? கர்த்தருடைய வார்த்தை[...] பெற்றிருப்பீர்களாயின் உங்களுக்[...] ஜீவனிருக்கும். அது உங்களது மாற்றாரு[...] அழிவை உண்டுபண்ணும்.

எரேமியாவின் வாயில் இரு[...] கர்த்தருடைய வார்த்தை தேவ பிள்[...] களுக்கோர் எச்சரிப்பாய் அமைந்து, அவர்க[...] சீர்பொருந்தப்பண்ணிற்று.

நீங்களும் எப்போதும் கர்த்தரு[...] வார்த்தைகளை நிரம்பப் பெற்று மற்[...] களுக்குப் போதித்து, அவர்களைக் கர்த்த[...] சீர்பொருந்தப்பண்ணுங்கள். அப்பொ[...] மாபெரும் எழுப்புதலைக் காண்பீர்கள். இன்[...] உங்களுடைய பிரசங்கமும், உங்களு[...]

கையும் விருதாவாய்க் காணப்படும்.

தெய்வீக அழைப்பைப் பெற்ற எரேமியா

"நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார்" (எரேமியா 1:5).

எரேமியாவின் தெய்வீக அழைப்பை வசனம் சுட்டிக்காட்டுகின்றது. தெய்வீக அழைப்பைப் பெற்றவர்கள்மட்டுமே தேவனுக்கு ஊழியஞ்செய்யமுடியும். சிலர், தங்களது அழைப்பு என்ன என்பது குறித்து அறிய, மற்ற போதகர்களிடமோ, அன்றி, தீர்க்கதரிசிகளிடமோ செல்லுகின்றனர். இது தவறு. குறித்த தனித்த வரத்தைத் தேவன் தமது பிள்ளைகளுக்கு அளிப்பது இல்லை.

"எரேமியாவே! உனது அழைப்பு என்ன?" என்று அவனிடம் கேட்டால், அவன் தனது அழைப்பைக் குறித்து இவ்வாறாகக் கூறுவான். "என் தாயின் வயிற்றில் நான் உருவாக்கப்படுவதற்கு முன்னமேயே அதாவது, என் கர்ப்பத்தில் உருவாகுவதற்கு முன்பே, கர்த்தர் என்னைத் தமது ஊழியத்திற்கென பரிசுத்தம்பண்ணி, தேவ பிள்ளைகளுக்கோர் தீர்க்கதரிசியாக விளங்கும்படியான அழைப்பை அளித்துள்ளார்" என்பான்.

ஆம், பிரியமானவர்களே! ஊழியத்திலே விசுவாசிகளும், ஊழியர்களும் பிரகாசிக்க வேண்டுமானால், தங்கள் ஊழியத்தைவிட்டு விலகாமலிருக்கவேண்டுமானால், தேவனுடைய அழைப்பைத் திட்டவட்டமாக அறிந்திருக்கவேண்டும்.

சிலர், "நான் ஏன்தான் ஊழியத்திற்கு வந்தேனோ, தெரியவில்லை; இன்னார் தீர்க்கதரிசனமாகக் கூறின வார்த்தைகளைக் கேட்டு, நான் என்னைத் தேவனுடைய ஊழியத்துக்கு ஒப்புக்கொடுத்தேன்; இப்போதோ எவருக்கும் பயனின்றி, வீணாய்ச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன்" என்பர்.

ஊழியத்தின் அழைப்பை மட்டுமன்றி, உங்களது ஊழியம், "இன்னது" என்றும் தேவன் முன்னரே குறித்திருப்பார். எரேமியாவின் ஊழியம், தீர்க்கதரிசனம் சொல்லுதல் ஆகும். அதுபோன்று, தேவன் உங்களை ஊழியத்துக்கு அழைக்கும்போதே, உங்களது ஊழியம் இன்னது என்பதைத் தெரிவிப்பார். அதனை நீங்கள் நன்கு அறிந்தபின்னரே ஊழியத்திற்குச் செல்லவேண்டும்.

போதகர், சுவிசேஷகர், தீர்க்கதரிசிகள், பாடகர், அபிஷேகத்திற்கு வழி நடத்துபவர், அற்புதங்களைச் செய்கிறவர், வியாதிகளைச் சுகப்படுத்துபவர் போன்ற பல அழைப்புகள் ஊழியப்பாதையில் உண்டு. அவற்றில் உங்களது பங்கு அல்லது ஊழியம் என்ன? என்பதை அறிந்து, அதன்பின்னர், ஊழியஞ்செய்ய உங்களை அர்ப்பணியுங்கள்.

சிலர், தங்களுக்குச் சபையில் பிரசங்கம் செய்ய வாய்ப்பு அளிப்பதில்லை என்று தங்கள் தலைமைப் போதகரிடம் குறை கூறுவது உண்டு. நான் ஒருமுறைகூட என்னுடைய தலைமைப் போதகராயிருந்த சுந்தரம் ஐயா அவர்களிடம், சபையில் பிரசங்கம் செய்யத் தருணம் கேட்டதில்லை. 1950 ஆம் ஆண்டில், நான் மாணவனாக இருக்கும்போதே சபையில் பிரசங்கம்பண்ண, போதகர் சுந்தரம் அவர்கள் என்னை அழைத்ததுண்டு.

இரவு 9 அல்லது 9.30 மணிக்கு, "தம்பி, நாளைக்குச் சுருக்கமாகப் பேச ஒரு செய்தியை ஆயத்தம்பண்ணிக்கொண்டு வாருங்கள்" என்பார். அப்போது நமது சபையில் 600 பேர் கூடி ஆராதித்துவந்தனர். தேவனுடைய வார்த்தைகளுக்காக இரவில் தேவனுடைய பாதபடியில் வெகுநேரம் அமர்ந்து காத்திருந்து, செய்தியை ஆயத்தம்பண்ணுவது எனது இயல்பு.

போதகர் சுந்தரம் ஏன் என்னை

அப்போதே அழைத்தார்? என்னுடைய வாயில் கர்த்தருடைய வார்த்தையிருந்தது என்பதையும், நான் ஊழிய அழைப்பைப் பெற்றவன் என்பதையும் அவரும் அறிந்திருந்தார்.

ஆம், அன்பானவர்களே! தேவ அழைப்பைப் பெற்று, உங்களுக்குரிய ஊழியத்தைச் செய்யுங்கள். சிலர், உதவித் தொகை பெறுவதற்காக ஊழியத்திற்கு ஒப்புக் கொடுக்கின்றனர். இதுவும் தவறே. உதவித் தொகை கிடைத்தாலென்ன, கிடைக்காவிடில் என்ன? உங்களது அழைப்பை நீங்கள் அறிந்திருப்பீர்களானால், உதவித்தொகை உங்களைத் தேடி வரும். உங்களை ஊழியத்தில் நிலை நிறுத்துவது பணமல்ல, உங்களது அழைப்பு என்பதை மறவாதிருங்கள். ஊழியத்தின் அழைப்பைப் பெற்றவர் எதற்கும் கலங்கமாட்டார். அழைப்பில் உறுதிப்படுங்கள்.

தெய்வீக தொடுதலைப் பெற்ற எரேமியா

"நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லி, கர்த்தர் தமது கரத்தை நீட்டி, என் வாயைத் தொட்டு: இதோ, என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன்" (எரேமியா 1:8,9).

எரேமியாவிடம் ஒரு தேவபெலன் இருந்தது. அது எதினால் உண்டானது? தேவனின் தொடுதலினால் உண்டானது. ஆம், தெய்வீக தொடுதலைப் பெற்றவர்கட்கு ஒரு சிறப்பான தேவபலம் கிடைக்கும். *"அப்பொழுது: ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, நான் பேச அறியேன்; சிறு பிள்ளையாயிருக்கிறேன் என்றேன். ஆனாலும் கர்த்தர்: நான் சிறுபிள்ளையென்று நீ சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளையெல்லாம் நீ பேசுவாயாக"* என்றார்.

எரேமியாவுக்குத் தன் அறிவைக்குறித்து ஒரு சந்தேகம் எழுந்ததை இங்குக் காண்கிறோம். "என்னாலே இந்த ஊழியத்தைச் செ முடியுமா? நான் சிறு பிள்ளையாயி அநுபவம் குறைந்தவன் ஆயிற்றே" பயந்தான்.

இன்று, அநேக ஊழியரும் வி களும் இந்நிலையில்தான் உ "எனக்கோர் சிறந்த கல்வி அறிவு இ முதிர்ந்த அநுபவம் இல்லை; சிறியவன்" என்று கூறுகின்றனர். ஊழியரு விசுவாசிகளுக்கும் தெய்வீக தொடுத ஒரு சிறந்த ஆசீர்வாதம் வேண்டும். உங்களைத் தொட்டு, "இதோ, வார்த்தைகளை உன் வாயிலே வைக்கி என்று இன்று கூறுகின்றார். விசுவாசியு

அன்பானவர்களே! நீங்கள் ஊழி கென பிரித்தெடுக்கப்பட்டால்மட்டும் போ தேவனின் கரம் உங்கள் வாயைத் வேண்டும். அவர் தொடுதலைப் அனைவரும் வேறு மனிதராவார்கள்.

யாக்கோபின் தொடைச் சந் தேவன் தொட்டபோது, அவன் "இஸ்ரவே மாறினான். பூமியிலே அவனை ஒரு சாட் மாற்றியமைத்தார் தேவன். ஏசாயா வாயைத் தேவன் தொட்டு, அவ பரிசுத்தப்படுத்தினார். எரேமியாவின் வா தேவன் தொட்டு, இஸ்ரவேலிலே தீர்க்கதரிசியாக அவனை நிறுத்தினார்.

தேவன் உங்களைத் தொடும் நீங்கள் வேறு மனிதனாக மாறுவீர்கள். ஏற்பாட்டிலே இயேசு கிறிஸ்து வியாதி களை, சிறுபிள்ளைகளைத் தொட்டார். அ சுகத்தையும் ஆசீர்வாதங்களையும் பெ கொண்டனர்.

"ஆண்டவரே! என்னைத் தொ என்று அனுதினமும் ஜெபியுங்கள். கர் தொடுதலைப் பெறாவிடின் நீங்கள் ஆவி வாழ்வில் பயனுடையவர்களாக மாறமு வீட்டிலும், வெளியே போகுமிடங்களி நாள் முழுவதும், தேவனது தொடு

...த்து. இடைவிடாமல் அதற்காக ...த்துக்கொண்டிருங்கள். அப்போது ...ால் சிறப்பாக உபயோகப்படுத்தப்படு...

...வீக வேலையைப் பெற்ற எரேமியா

"பார், பிடுங்கவும், இடிக்கவும், ...கவும், கவிழ்க்கவும், கட்டவும், நாட்டவும் ...ன நான் இன்றையதினம் ஜாதிகளின் ...ராஜ்யங்களின்மேலும் ஏற்படுத்தினேன் ...கர்த்தர் என்னுடனே சொன்னார்" (...மியா 1:10).

தமது தெய்வீக வேலையை ...க்கும்படி தேவன் எரேமியாவுக்குக் ...னை கொடுத்தார். மேலே கூறப்பட்ட ...களான பிடுங்குதல், இடித்தல், அழித்தல், ...த்தல், கட்டுதல் இவை அனைத்தும் ...தினபடியான செயல்களைப் பொருள் ...துவது அன்று; ஆவிக்குரிய செயல்பாடு ...க குறிப்பது. இஸ்ரவேலரை ஆவிக்குரிய ...யில் சீர்ப்படுத்த எரேமியாவைக் கர்த்தர் ...ந்துகொண்டு பயன்படுத்தினார்.

இயேசு கிறிஸ்து இவ்வுலகில் ...ந்தபோது, பரலோக இராஜ்ஜியத்தைக் ...த விளக்கங்களைப் பல உவமைகளால் ...சீஷர்களுக்குத் தெளிவுபடுத்தினார். ...ற்றுள், *"பரலோக இராஜ்ஜியம் நல்ல ...த்தில் விதையை விதைத்த மனுஷனுக்கு ...யானது"* என்னும் ஓர் உவமையையும் ...னார். நல்ல நிலத்தில் சத்துருவான பிசாசு ...ட்டின களைகளை, எஜமான் அறுப்புநாள் ...டும் பொறுத்திருந்து பின்னர், பிடுங்கி ...ரியச் சொன்னான்.

ஆம், அதுபோன்றே தேவ பிள்ளை ...ின் ஆவிக்குரிய வாழ்வில் பிசாசானவன் ...ந்க்கும் தீய செயல்கள் அனைத்தையும் ...ன் நிச்சயமாகப் பிடுங்கிப்போடுவார்.

"... பரமபிதா நடாத நாற்றெல்லாம் ...டே பிடுங்கப்படும்" (மத்தேயு 15:13) என்றுள்ள வசனத்தின் ஆவிக்குரிய கருத்தை நன்கு அறிந்து செயல்படுங்கள். உங்கள் வாழ்வில் தேவனுக்குப் பிரியமாயிராத எல்லாக் காரியங்களையும் பிடுங்கி அகற்றுங்கள்.

"... இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்தில் விற்கிறவர்களையும் கொள்ளுகிற வர்களையும் துரத்திவிட்டு, காசுக்காரருடைய பலகைகளையும், புறா விற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்து..." (மாற்கு 11:15).

ஆம், தேவனுக்கு விருப்பமில்லாத அனைவற்றையும் தேவாலயத்திலிருந்து இயேசு கவிழ்த்துப் போட்டார்; தூக்கி எறிந்து விட்டார். இயேசுவின் தேவ ஆலயமாக விளங்கும் நீங்கள் எவ்வாறு இவ்வுலகில் வாழ்கிறீர்கள்? ஆராய்வீர்களாக.

தேவனுக்கு விருப்பமில்லாது உங்களது இருதயமாகிய தேவ ஆலயத்தில் காணப்படும் காரியங்களைத் தூக்கியெறியவும், பிடுங்கி அகற்றவும் ஆயத்தமா? உங்களுடைய ஊழியம் மற்றவர்களைக் கட்டவும், விடுவிக்கவும், நாட்டவுந்தக்கமுறையில் அமைந்துள்ளதா?

"ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, ... உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத் தோடே அதிலே பெருகுவீர்களாக" (கொலோ.2:6,7).

ஆம், தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் முதலாவது நமது ஆவிக்குரிய வாழ்வை இயேசுவுக்குள் கட்டவேண்டும். மற்றவர்களின் கட்டுகளை அவிழ்க்கவும் நிலைநாட்டவும் நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை நினைவிற் கொள்ளவேண்டும். ஊழியத்திலே புருஷன் கட்டினதை மனைவி நிலைநாட்டவேண்டும். மனைவி கட்டினதை புருஷன் நிலைநாட்ட வேண்டும். இவ்வாறு ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து, ஒருமனப்பட்டு, தங்களையும் தங்களது ஊழியங்களையும் நிலைநாட்ட

வேண்டும். நீங்கள் இரட்சிப்புக்குள் வழிநடத்தின ஆத்துமாக்களைக் கட்டி எழுப்பி, கிறிஸ்துவுக்குள் நிலைநாட்டி, எரேமியாவைப்போல பயனுள்ள ஊழியத்தைச் செய்ய உங்களை அர்ப்பணியுங்கள்.

"நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப் பாய்ச்சினான், தேவனே விளையச்செய்தார்" (1 கொரி.3:6) என்றார் பவுலடியார்.

ஆம், பவுலடியாரைப்போன்று, புதிய இடங்களிலே கிறிஸ்துவின் சுவிசேஷத்தை நாட்ட, பிரயாசப்படுங்கள்; ஆத்துமாக்களை இயேசுவுக்கென்று கட்டி எழுப்பி, நிலை நிறுத்துங்கள். தேவன்தாமே உங்களுக்கு உதவி செய்வாராக.

தெய்வீக தரிசனத்தைப் பெற்ற எரேமியா

"பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: எரேமியாவே, நீ என்னத்தைக் காண்கிறாய் என்று கேட்டார்..." (எரேமியா 1:11);

"கர்த்தருடைய வார்த்தை இரண்டாந் தரம் எனக்கு உண்டாகி, அவர்: நீ காண்கிறது என்ன என்று கேட்டார்..." (எரேமியா 1:13);

மேற்காணும் இரு வசனங்களிலும், எரேமியாவின் தரிசனம் குறித்துக் காண்கிறோம். முதன்முறை எரேமியா வாதுமை மரத்தின் கிளையையும், இரண்டாம் முறை பொங்குகிற பானையையும் கண்டான். இவைகளின் உட்கருத்துக்களை நாம் இப்போது அறிந்து கொள்ளத் தேவையில்லை. இஸ்ரவேல் புத்திரர் வாழ்க்கையின் தவறுகளையும், தாங்கள் தப்பு விக்கப்பட அவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதையும் தேவன் தமது தரிசனத்தின் வாயிலாக எரேமியாவுக்குக் காண்பித்தார்.

இன்றைய நாட்களில் ஊழியர்களுக்குத் தங்களது ஊழியத்தைக்குறித்தும் ஊழியஞ் செய்யவேண்டிய இடத்தைக்குறித்தும், தங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட ஆத்துமாக்களைக் குறித்துமுள்ள தரிசனம் தேவை. தரிசன மின்றேல் வெற்றிகரமாக ஊழியஞ்செ முடியாது. எங்கெங்குச் சுவிசேஷம் அறிவி படவில்லையோ அந்தந்த இடங்களைக்கு பாரம் ஊழியர்களுக்கு மிகமிக அவசியம்.

தாங்கள் வாழுமிடங்களைச் சுற்றி வட்டாரங்கள், கிராமங்கள், பட்டண இவற்றைக்குறித்த தரிசனங்கள் தேவனு பிள்ளைகளுக்குத் தேவை. தேவ பிள் களைச் சரியான வழியில் நடத்தக் தரிசனமும் அவர்களுக்கு அவசியம். தங்க எவ்விதமான ஊழியத்தைத் தேவன் குறித்து என்றுள்ள தரிசனமும் ஊழியருக்கு அவசியமா

எரேமியா புத்தகத்தை ஒரு தரிசனத் புத்தகம் என்று கூறினால், அது மிகையா எரேமியா பெற்றது போன்றதொரு தரிசனத் தேவன்தாமே உங்களுக்குத் தந்தருளுவா

தெய்வீக செய்தியைப் பெற்ற எரேமி

"ஆகையால் நீ உன் அரையைக் க கொண்டு நின்று, நான் உனக்குக் கட்ட யிடுகிறவைகளையெல்லாம் அவர்களு சொல்" (எரேமியா 1:17);

எரேமியா தேவ செய்தியைப் பெ மனிதன் என்பதை மேற்காணும் வச தெளிவிக்கின்றது. *'நீ உன் அரை கட்டிக்கொண்டு நின்று'* என்றுள்ள சொற் எரேமியா தைரியமாகத் தேவனது கட்ட களை மக்களுக்குப் போதிக்கவேண் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. ஆம், ஊழியர்கள் தேவ செய்தியை வேத அகராதி னின்றோ, வேறு புத்தகங்களினின் தயாரித்துப் பிரசங்கிக்கக்கூடாது. முதன்முறை வேதாகமத்தில் கோடிட்டுப் படித்த மு வசனங்களையே திரும்பத் திரும்பக் கவ பதன்மூலமாக, சிறந்த வேத அறிவைப் முடியாது. தேவ பிள்ளைகள் அனைவ வேத அகராதிகளாகச் செயல்படவேண் வேதாகமத்தை நன்குப் படிக்கவேண் அதுவே ஊழியக்காரனின் தகுதி.

புதிதாக வேதாகமங்களை வாங்குங்கள். ழைய வேதத்தில் கோடிட்ட வசனங்களையே றிக்கொள்ளாமல், தேவன் உங்களோடு படும் வசனங்களை முக்கியப்படுத்திச் திகள் வழங்குங்கள். கர்த்தர் தரும் திகளை நீங்கள் தேவ பிள்ளைகளோடு ந்துகொள்ளும்போது, ஒரு சிலர் அதில் று காணலாம். மற்றுஞ்சிலர் அதில் தோஷப்பட்டுக் களிகூரலாம். இவைகளை ன் பொருட்படுத்தக்கூடாது. உங்களது களைத் தைரியமாய்க் கட்டிக்கொண்டு, செய்திகளை மக்களுக்கு அறிவியுங்கள். ரமியாவைப்போல தேவ செய்தியை ளிக்க, தைரியப்படுங்கள்.

தெய்வீக பாதுகாப்பைப் பெற்ற எரேமியா

"இதோ, தேசமனைத்துக்கும், யூதாவின் ராஜாக்களுக்கும், அதின் பிரபுக்களுக்கும், அதின் ஆசாரியர்களுக்கும், தேசத்தின் ஜனங்களுக்கும் எதிராக நான் உன்னை றையதினம் அரணிப்பான பட்டணமும், இரும்புத்தூணும், வெண்கல அலங்கமும் ஆக்கினேன். அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள்; ஆனாலும் உன்னை மேற்கொள்ளமாட்டார்கள்; உன்னை இரட்சிக்கும் படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 1:18,19).

தேவன் எரேமியாவுக்கு ஒரு தெய்வீக பாதுகாப்பு அளிக்கிறதை இங்குக் காண்கிறோம். தமக்கு விரோதமாக மக்கள் செய்யும் பாவக் காரியங்களைக்குறித்து எரேமியாவைத் தீர்க்க தரிசனம் உரைக்கப்பண்ணினார் தேவன். அதனால் அவர்கள் எரேமியாவுக்கு விரோதமாக எழும்பினர். அவர்களுக்கு முன்பாக தேவன் அவனை ஓர் அரணிப்பான பட்டணமாகவும், இரும்புத்தூணாகவும், வெண்கல அலங்க மாகவும் நிறுத்தினார். தேவனது பாதுகாப்பு அத்துணை ஆச்சரியமாகவும், மகிழ்ச்சி தருவதாகவும் அமைகிறது!

தேவ மக்கள் அவனுக்கு எதிராக மாறுவர் என்பதைத் தேவன் முன்னமே அவனுக்கு வாக்குப்பண்ணியிருந்தார். ஆம், தேவனது எச்சரிப்புச் செய்தியை மக்களுக்கு அளிக்கும்போது மக்கள் கொதித்தெழும்புவது இயல்பே. எனினும், *"உன்னை இரட்சிக்கும் படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்"* என்று எரேமியாவுக்குத் தேவன் வாக்களித்துள்ளது குறிப்பிடத்தக்க பாதுகாப்பை விளக்குகின்றது.

பிரியமானவர்களே! உங்களுக்கு விரோதமாக மக்கள் யுத்தஞ்செய்ய வந்திடினும் பயப்படாது, தைரியப்படுங்கள். *"... இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்"* (மத்தேயு 28:20) என்ற இயேசுவின் வாக்கு உங்களைப் பெலப்படுத்தட்டும்.

நீங்கள் உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். உலகத்தார் உங்களை, "வருக வருக" என்று வரவேற்பதற்கு மாறாக, துரத்தியடிக்கலாம். நீங்கள் இரத்த சாட்சியாய் மரிக்கவும் நேரிடலாம். எனினும், இயேசு கிறிஸ்து உங்களுடனேகூட இருக்கிற படியால் பயந்து கலங்காமல் தைரியப் படுவீர்களாக. கர்த்தர் உங்களைக் காப்பார். உங்களைக் கைவிடமாட்டார். நிச்சயமாகவே ஆத்துமாக்களைக் கொள்ளைப் பொருளாக உங்களுக்குத் தந்தருளுவார். நீங்கள் கட்டப் படுவீர்கள். உங்கள்மூலமாகப் புதிய புதிய சபைகள் உருவாகும். இன்று உங்களுடைய எதிரிகளாகச் செயல்படுபவர்கள் நாளை தேவனை அறிந்துகொள்வர்.

எரேமியா, தன் கடைசி நாட்களில் இரத்த சாட்சியாய்த்தான் மரித்தான் என்று வரலாறு கூறுகின்றது. எது நடப்பினும் கர்த்தர் உங்களோடிருக்கிறார் என்பதை மறவாதிருங்கள். எரேமியாவுக்குப் பாதுகாப்புத் தந்த தேவன் உங்களுக்கும் பாதுகாப்பளிப்பார். எரேமியாவின் பண்புகளனைத்தும் உங்களுடைய பண்புகளாக அமைய, கர்த்தர்தாமே உதவிசெய்வாராக.

(Please read Psalm 93:1-5)

Sovereignty is associated with kings and queens who have a kingdom on the earth which they rule. Our God is the KING OF KINGS and the LORD OF LORDS. He rules both heaven and earth, and His sovereignty is eternal.

Verse 1 of Psalm 93 rightly points out that the Lord is clothed with majesty. A king or queen is addressed, "Your Majesty", and our God is indeed our Majesty; as such, it is only appropriate that He is clothed (covered) with majesty.

Let us consider Jehovah's sovereignty by dividing the psalm into three sections, namely, the declaration, demonstration and distinction of Jehovah's sovereignty.

The declaration of Jehovah's sovereignty

"The Lord reigneth, he is clothed with majesty; the Lord is clothed with strength, wherewith he hath girded himself: the world also is stablished, that it cannot be moved.

Thy throne is established of old: thou art from everlasting" (Psalm 93:1 and 2).

Our God is One who was, who is and who will be for ever. He is alive eternally. We worship a living Saviour, for Jesus said, *"I am he that liveth, and was dead; and, behold, I am alive for evermo[re]"* (Rev.1:18). The true and living God is i[n our] midst today, and we worship Him in [spirit] and in truth.

As I went through the psalm, [...] thoughts about Jehovah occurred to me[...] they are: His splendour, His strength an[d His] seat.

The splendour of the Lord

V.1— *"He is clothed with maje[sty]"*

The Lord's impressive and attra[ctive] quality itself is His clothing, for the firs[t part] of this verse says, *"He is clothed with [maj]esty."* Verse 1 of Psalm 8 says, *"You [have] set your glory on* [or above] *the hea[vens]"* (Amplified Bible).

The Tamil version uses the w[ord] 'மகத்துவம்' for 'majesty'. How is His [maj]esty revealed? It is revealed in the splen[dour] of Creation. The heavens which declare [the] glory of God, the earth which is resplen[dent] in a variety of hues, the sun which shin[es in] all its brilliance, and the moon and the s[tars] which give out light in the night sky— these are breathtakingly beautiful and [...] reflect God's glorious creation in a[ll its] grandeur.

God created all things by spea[king] words of command, but when He cr[eated] man the crown of creation, He did no[t ...]

...there be man", but made him with His ... hands. He took the dust of the earth, ...ed him and breathed into his nostrils the ...h of life. And man became a living soul. ... created man in His own image and ...hed him with His glory. We are able to ... that every aspect of Jehovah's Creation ...eals His splendour.

When Jesus took Peter, James and ...hn to a mountain to pray, He transfigured ...ere and appeared in all His majesty and ...ory. The three disciples were eye witnesses ... His majesty. Then they heard a voice from ...aven saying, *"This is my beloved Son: ...ar him"* (Luke 9:35).

The Lord forgives our sins by His ...ercy which is a characteristic of His maj...esty as we read in Numbers 14:19. All our ...sins are forgiven by this great God, and there...fore, we should thank and praise Him with ...all our heart.

The strength of the Lord

Ps.93:1— *"... the Lord is clothed ...ith strength,"*

The Lord is clothed with majesty on the one hand, and strength on the other. It is indeed difficult to describe His strength in words.

In Ps.24:8 David the psalmist says, *"Who is this King of glory? The LORD strong and mighty, the LORD mighty in battle."*

The Tamil version uses a better and a more powerful expression to describe the Lord's strength and might. It says, *"வல்லமையும் பராக்கிரமும்..."*. Since David did not have suitable words to describe the strength of Jehovah, he merely began by posing a question: *"Who is this King of glory?"* and ended by answering it thus: *"The LORD strong and mighty, the LORD mighty in battle."*

In the Old Testament there are accounts of many battles between the Israelites and their enemies. Yet, because the Lord is the King of glory and mighty in battle, He helped them win many a battle. Today Jehovah is on our side, and we need not fear our adversary.

The seat of the Lord

V.2—*"Thy throne is established of old: thou art from everlasting."*

"Thus saith the LORD, The heaven is my throne, and the earth is my footstool:..." (Is.66:1).

The verses quoted mention the throne of God which is His seat. We are unable to comprehend the size of the Lord's throne because heaven itself is said to be His throne. It surely is enormous in size.

Prophet Isaiah had a vision of the Lord. He saw the Lord seated on a throne, high and exalted, and the skirt of His robe filled the temple. Isaiah was awestruck and felt unworthy to look at Him.

In Revelation chapter 4 there is a picture of twenty four elders prostrating themselves before the One seated on the throne in heaven and worshipping Him.

In Holy Scripture we read about

angels who are standing round the throne prostrating themselves before the throne and worshipping God (Rev.7:11). As children of God we ought to be filled with awe when we think of the majesty of God, and therefore, we should worship Him bowing before Him in all humility.

Now, we understand that the seat of Jehovah in His throne in heaven. He is the sovereign of heaven and earth, and He is seated on His throne in heaven from where He rules everything in heaven and on earth.

The demonstration of Jehovah's sovereignty

"The floods have lifted up, O LORD, the floods have lifted up their voice; the floods lift up their waves.

The LORD on high is mightier than the noise of many waters, yea, than the mighty waves of the sea" (Ps.93:3 and 4).

A deep meditation of the two verses reveals that verse 3 speaks of the natural force and verse 4, the divine force. In other words, the first one deals with the world power which assails, and the second one, the divine power which prevails.

The world power assails

"The floods have lifted up, O LORD, the floods have lifted up their voice; the floods lift up their waves" (v.3).

Though the psalmist mentions floods, waves and waters in his psalm, those natural forces really denote the adverse circumstances God's people are confronted with. Throughout the Scriptures we see that the river stands for unfavourable circumsta
If you read Jeremiah 46:1-7 you will n
that God mentions the river where the pe
of Egypt perish. In verses 5 and 6 God pr
esies through Jeremiah that the peop
Egypt would stumble by the side of the
Euphrates.

Jonah was in the belly of a fish i
sea and he found himself in a great pre
ment. Jonah's words, *"For thou hadst
me into the deep in the midst of the s
and the floods compassed me about: a
billows and thy waves passed over*
(Jonah 2:3) describe his miserable cond
when the waters of the sea compassed
about and the waves passed over him.

Once Jesus and His disciples we
a boat when there was a violent storm i
sea and the waves were breaking agains
boat. But, Jesus was sleeping (Matt.8
The disciples cried out in fear thinking
were going to sink in the sea.

Even today such situations in the
of God's people are not uncommon. You
have to face dangerous situations in
life.Figuratively, they are floods in
Christian life. In Psalm 93:3 the writer
sonifies floods and says, *"The floods*
*lifted up their voice;" "the floods li
their waves."* These statements clearly s
how much the children of God are ass
by unfavourable circumstances in their l

Jehovah's power prevails

*"The LORD on high is mightier
the noise of many waters, yea, than
mighty waves of the sea"* (v 4).

The waves of the sea are, without a doubt, mighty, but the Lord is mightier than the noise of many waters and the mighty waves of the sea.

When you face the formidable powers of nature such as storms, thunder, lightning, cyclones and floods, you are overwhelmed with fear. Similar would have been the mental condition of the children of Israel when they had to cross the river Jordan which was in spate. But, the power of Jehovah—Almighty and Eternal God—prevailed, and the people crossed the river by walking on dry ground because, as the Lord had instructed Joshua, the priests carrying the Ark stood on the edge of the water, and the waters which came down from above, stood in a heap creating a passage of dry ground (Joshua 3:17).

Children of God, never fear any force that rises against you. You have a power far mightier than the power of the world which makes you tremble. If you know the power that prevails over all worldly power, you will face any unfortunate and unfavourable situations in your life boldly.

The distinction of Jehovah's sovereignty

"Thy testimonies are very sure: holiness becometh thine house, O LORD, for ever."

The children of Israel had God as their sovereign Lord, and therefore, they were victorious over many of their enemies. They had the distinction of being the children of Jehovah, and as a nation they were superior to all other nations of the world. The distinction (their being special) was because of the Testimonies of God (the Word of God which is unique) and His Temple.

God's Testimonies

Verse 5 of Psalm 93 mentions, *"Thy Testimonies"*. The Testimonies of God are His Word or Holy Scripture. In Ps.119 the words *'precepts'*, *'statutes'*, *'the law of God'* and *'testimonies'* are used, and they refer to the immutable and inexhaustible Word of God which we are fortunate to have in the Holy Bible. In Ps.119:111 the Psalmist says, *"Thy testimonies have I taken as an heritage for ever: for they are the rejoicing of my heart."* We read the words *'the law of the LORD'* in Ps.19:7 and *'his covenant'* and *'his testimonies'* in Ps.25:10.

King David says, *"... the testimony of the LORD is sure,..."* (Ps.19:7). The precepts of the Lord are definite rules, the keeping of which gives a clear conscience. Moreover, it is only by reading the Word of God, hiding it in your heart, meditating on it and practising it in your daily life that you can overcome the adversities that come against you like a flood.

The practice of observing the law of the Lord will make you see the Lord being mightier than the floods, and you will understand the distinction of His sovereignty.

God's Temple

"... holiness becometh thine house, O LORD, for ever" (v.5).

The house of the Lord is His temple.

What is the distinguishing feature of the Temple of God? It is holiness. Holiness is the beauty of the house of the Lord, and you should worship Him in the beauty of holiness (Ps.29:2). It is not merely the thought that the Lord is mightier than the floods that should make you rejoice. You should rejoice that the Holy Lord is with you, and since body is the temple of God (I Cor.6:19), should keep it holy. Be holy in your thou speech and deed. Let holiness be your wa word, and, as the Word of God instructs to do, *"Follow... holiness without whic man shall see God"* (Hebrews 12:14).

ஊழியர் பகுதி

விசுவாச அப்போஸ்தலன்

ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

முன்னுரை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் தோன்றி இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை வாழ்ந்தவர் ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த். இவரைக் கண்டவர்களில் பலர் இன்றும் நம்மிடையே வாழ்கின்றனர்.

பலநூற்றாண்டுகளாக அப்போஸ்தலர் களின் அற்புதங்களைக் காணவில்லையே என்ற ஏக்கம் மனுக்குலத்திற்கே இருந்தது. இங்கிலாந்து தேசத்திலே ஏழைத் தொழிலாளியின் மகனாகப் பிறந்து, தானும் ஒரு பிளம்மர் (Plumber) என்ற தொழிலாளியாகவே ஜீவனம் செய்த பள்ளிப்படிப்பறியா ஒரு எளிய மனிதர் இந்த ஏக்கத்தைப் போக்கும்படியாய் ஒரு திறப்பின் வாசலைக் கண்டார்.

தேவனுடைய சுகமாக்கும் வல்லமை வானங்களைக் கிழித்திறங்கியது. தமது 87 ஆம் வயதுவரை, தமது மரண நாள்வரை அந்தச் சுகமாக்கும் வல்லமையைப் பயன்படுத்திய இவர், பலரை உயிரோடெழுப்பியது உண்டு. இன்னும் மரணத்தருவாயிலிருந்து காப்பாற்றியது உண்டு. ஆயிரக்கணக்கான கூன், குருடர், செவிடர், முடவர் என்போரையும் காண வைத்ததுண்டு, கேட்க வைத்ததுண்டு, நிமிர்ந்து நடக்க வைத்ததுண்டு.

ஆயினும் ஆவியின் அபிஷேகத்தில் நிரம்பி வழிந்த இவர் ஆத்தும இரட்சிப்பை இதைவிடப் பெரிதான அதிசயமாகக் கருதி அதையே தம் முதல் நோக்கமாக கொண்டிருந்தார்.

"விசுவாசமுள்ளவனாயிரு" என்ற தாரக மந்திரத்தை, ஒரே சூத்திரத்தை வாழ் முழுவதும் கடைப்பிடித்த இவர், இந்த அடிப்படையில் 'துணிகரமான சாதனைக நிகழ்த்தினார்.

தேவன் பேசும்போதெல்லாம் தய மின்றிக் கீழ்ப்படிந்த இவரது விசுவா ஒருபோதும் தொய்ந்து போகாதது. சில ச முரட்டுத்தனமான அவரது போதிக்கும் எண்ணற்ற ஆத்துமாக்களை இரட்சிப்புக் கொண்டுவந்தது. அவரது களங்கமில் மனதுருக்கம் அனுதினமும் அப்போஸ் கால அற்புதங்களைச் செயல்படுத்தியது.

நாம் வாழும் இந்தக் கடைசிநாட்க இதுவரை எவரும் காணாத அளவுக் தேவனுடைய ஆவியின் அருள்மாரி பொழி அவருக்கு ஒரு தனித்த தரிசனமாக அளிக் பட்டிருந்தது. இதற்கு மூலகாரணமா போகிறவர் யார் என்றும் தீர்க்கதரிசன உரைத்த இவர், "இந்தத் தீர்க்கதரிசனத் நிறைவேறுதலின்போது நான் உயிரோடி மாட்டேன்" என்றும் 1942 ஆம் ஆண்

...னார். நாம் வாழும் இன்றையக் காலத்தில் ...த் தீர்க்கதரிசனங்கள் நிறைவேற ...மாகிக்கொண்டு வருகின்றன.

...ஏனோக்கைப்போல தேவனோடு ...ித்த இவர், "பரிசுத்தவான்களுடைய ... கர்த்தருடைய பார்வையில் ...மையானது" என்ற வசனத்திற்கேற்ற ...யில் தேவனோடு சேர்ந்தார்.

காலத்தால் அழியாத இவரது சரிதம், ...வாசத்தை எப்படிச் செயல்படுத்துவது ... நமக்குப் போதிக்கிறது.

விசுவாச அப்போஸ்தலன் ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

நம் அருள் நாதர் இயேசு கிறிஸ்து, தாம் ...லகத்திலிருந்த நாட்களிலே, மரித்தோரை ...யிரோடெழுப்பினார். பழைய ஏற்பாட்டுக் ...லத்திலே, எலியாவும், எலிசாவும் மரித்துப் ...ான சிறுவர்களை உயிரோடெழுப்பினார்கள். ...தி அப்போஸ்தலர்களான பேதுருவும், ...வும் மரித்தோரை எழுப்பினார்கள்.

மரித்தோர் எழுப்பப்படுவதெல்லாம் ...வேதாகம காலத்தோடு முடிந்துவிட்டதா? ...க்கேள்விக்குப் பதிலளிக்கும் வகையில் ...ழுந்தவர்தான் "விசுவாச அப்போஸ்தலன்" ...று அழைக்கப்படும் ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்.

லாசருவை இயேசு உயிரோடெழுப்பிய ...போது அவருக்கிருந்தது மனதுருக்கம். நாயீன் ...ஊர் விதவையின் மகனை இயேசு உயிரோ ...டெழுப்பியபோது அவருக்கிருந்தது மனதுருக்கம். ...ும், இயேசு கிறிஸ்துவின் அதே மனதுருக் ...கத்தை விக்கிள்ஸ்வொர்த் பெற்றிருந்ததுதான் ...வரும் மரித்தோரை உயிரோடெழுப்பக் காரணம்.

நம் கர்த்தர் இன்றும் அப்படிப்பட்ட ...னதுருக்கம் நிறைந்தவர்களையே—தம் ...ஊழியத்தைச் செய்யும்படி, விழுந்துபோன ...க்குலத்தை, குணமாக்கி, சொஸ்தமாக்கி, ...ரித்து அதைத் தம்மோடே ஒப்புரவாக்கிக் ...கொள்ளும்படி —தமக்காகத் தேடுகிறார்.

இயேசுவின் ஆரம்ப வாழ்க்கையைப் போலவே, இவரது ஆரம்ப வாழ்க்கையும் மிக எளிமையானதுதான். இயேசு தச்சனுடைய குமாரன் என்னப்பட்டார். தமது முப்பதாம் வயதுவரை தம் ஜீவனத்துக்காக, ஒரு தச்சனாகவே வாழ்ந்தார். அக்காலத்திய தச்சு வேலை மிகக்கடினமானதுதான். அவ்வாறே கடினமாக உழைக்கும் ஒரு தொழிலாளியின் மகனாகப் பிறந்த விக்கிள்ஸ்வொர்த், தமது ஜீவனுக்காக, தண்ணீர்க் குழாய் ரிப்பேர் செய்யும் ஒரு தொழிலாளியாகத்தான் (Plumber) வாழ்க்கையை ஆரம்பித்தார்.

விக்கிள்ஸ்வொர்த்தின் அதிசயிக்கத்தக்க ஊழியத்திலே, மரித்தோரை எழுப்புவது என்பது ஒரு சிறு அம்சம்தான். ஆவியானவரின் அபிஷேகத்திலே அவர் நிரம்பித் ததும்பி வழிந்து வாழ்ந்ததை நினைக்கும்போது, அவருடைய அற்புத ஊழியங்கூட இரண்டாம் பட்சம்தான். 'துணிகரமான சாதனை' என்ற சொல்லுக்கே இலக்கணமாகத் திகழ்ந்த இவர், தமது 'துணிகரமான சாதனைகளுக்கெல்லாம்' பயன்படுத்திய ஒரே சூத்திரம் —**"விசுவாச முள்ளவனாயிரு"** என்பதே.

"தயக்கமின்றிக் கீழ்ப்படிதல்" என்பதே அவர் வாழ்க்கை முறையாயிருந்தது. அவரது விசுவாசம் ஒருபோதும் தொய்ந்துபோகாதது. சில சமயங்களில் முரட்டுத்தனமானது. ஆனால் அதே சமயம், அவரிடமிருந்த "போதிக்கும் வரம்", எண்ணற்ற ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் கொண்டுவந்தது. அவரது உண்மையான மனதுருக்கம் அனுதினமும் அற்புதங்களைச் செயல்படுத்தியது.

விளையும் பயிர் முளையிலே

எழுப்புதல் ஒரு புயலைப்போல் வீசிவந்த காலம் அது. ஒரு புயலைப்போலவே 'இரட்சணிய சேனை' (Salvation Army) என்ற இயக்கம் திரு. வில்லியம் பூத் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது.

இந்தக் காலக்கட்டத்தில்தான், அதாவது

1859 ஆம் ஆண்டு, ஜூன் மாதம், 8 ஆம் நாள் ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த், இங்கிலாந்து தேசத்திலே, யார்க்ஷயர் நகருக்கருகில் இருந்த மென்ஸ்டன் என்ற சிறிய கிராமத்திலே பிறந்தார். தந்தையர் பெயர் ஜான் விக்கிள்ஸ்வொர்த். தாயார் பெயர் மார்த்தா. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகப் புகைந்து கொண்டிருந்த திருச்சபையை அனல்மூட்டி, அக்கினியாகப் பற்றி எரியவைக்கப் போகிறவன் அந்தக் குழந்தை என்று அந்த எளிமையான பெற்றோருக்கு அப்போது தெரியாது.

அது ஒரு ஏழைக்குடும்பம். தன்னுடைய மனைவி, ஒரு மகள் மற்றும் மூன்று குமா... கொண்ட குடும்பத்தை வாழவைக்க, நீ... நேரம் உழைத்து வந்த சாதாரணத் தொழி... அந்தத் தந்தை. எனவே, தனது ஆறு வயதி... வயலில் வேலைசெய்வதற்கு ஆரம்... விட்டான் சிறுவன் விக்கிள்ஸ்வொர்த். வி... காலைமுதல் இரவுவரை வயலிலே ... கிழங்கு பிடுங்கும் வேலை. அந்தப்பி... கரங்கள் பிய்ந்து, புண்ணாகி, வீங்கிவிடும்...

(தொட...

வேதபாடம்

உன்னதப்பாட்டு

பாடம் 25 (தொடர்ச்சி)

(உன்னதப்பாட்டு 8:8,9)

"நம்முடைய சகோதரியைக் கேட்கும் நாளில் அவளுக்காக நாம் என்ன செய்வோம்" (வச.8)?

முந்தின பகுதியில், *"நமக்கு ஒரு சிறிய சகோதரி"* என்றும், அடுத்து வரும் வாக்கியத்தில், *"அவளுக்காக நாம் என்ன செய்வோம்?"* என்றும் மணவாட்டி பன்மை எண்ணில் பேசியுள்ளதைக் காண்க. இச்சொற்களை அவள் தன் மணவாளனோடு இணைந்து கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதனால் நாம் என்ன அறிகிறோம்? மணவாட்டி தன் நேசரோடு எப்போதும் ஒன்றித்திருந்தே வாழ்ந்தாள் என்பதை அறிய முடிகின்றது. கர்த்தரது அன்பின் வளர்ச்சியில் குன்றிய பிற விசுவாசிகளைக்குறித்து, தான்மட்டும் பாரங்கொள்ளாமல், நேசரோடு சேர்ந்து ஒருமனதுடன், *"நாம் என்ன செய்வோம்"* என்றாள்.

உன்னதப்பாட்டு 8:1 இல், *"நீர் என் சகோதரனைப் போலிருந்தீரானால்"* என்று கூறினவள், இப்போது தன் நேசரோடு இணைந்து தன் சகோதரிக்காகத் திட்டமிட்ட... காண்கின்றோம். தம்மோடுள்ள அன்... வளர்ச்சியில் குறைந்து காணும் தம்மு... பிள்ளைகளுக்காக, இயேசுவும் பாரப்படுகி... பிரயாசப்படுகிறவர்.

தேவபிள்ளைகள் அனைவ... இயேசுவோடு இணைந்து காணும் ஒ... குடும்பத்தினர் என்பதை அறிவோ... மணவாட்டி, தன் சிறிய சகோதரி... தேர்ச்சிக்குள்ளாக்கும் உத்திரவாதத்... எடுத்துக்கொண்டதுபோல, விசுவ... களாகிய நாமும் தேவ அன்பில் வளரா... களுக்கான உத்திரவாதத்தை ஏற்று, செ... படுதல் வேண்டும்.

"காலத்தைப் பார்த்தால், போத... யிருக்கவேண்டிய உங்களுக்கு... உபதே... வேண்டியதாயிருக்கிறது; பாலை உண்ண... வர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்... யிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்... பழக்கமில்லாதவனாயிருக்கிறான்" (எபி... 5:12,13).

தேவ அன்பில் தேர்ச்சியடையா... களைக்குறித்துப் பவுல் மிகுந்த பாரத்தோ...

...வாது இங்கு, நமக்கோர் எடுத்துக் ...விளங்குகின்றது.

பழைய ஏற்பாட்டுப் புத்தகத்தில் ...ஜனங்களின் தலைவனாக நின்று ...ந்தின மோசே, தம்மக்கள் தேவனை ...வழிவிலகினபோது, அவர்களுக்காகப் ...டு, இதயம் நொந்து தேவனிடம் ...ளதை, யாத்திராகமம் 32:32 இல் ...கிறோம். தேவன் இஸ்ரவேலரை ...விடில், தன் பெயரை அவரது ...த்திலிருந்து கிறுக்கிப்போடும்படி ...டம் மன்றாடினான். *"இந்த ஜாதி ...டைய ஜனமென்று நினைத்தருளும் ..."* (யாத்.33:13).

புதிய ஏற்பாட்டில் ரோமருக்கு எழுதிய ...த்தில், பரிசுத்த பவுல், *"மாம்சத்தின்படி ...னத்தாராகிய என் சகோதரருக்குப் ... நானே கிறிஸ்துவைவிட்டுச் சபிக்கப் ... வேண்டுமென்று விரும்புவேனே"* (... 9:3) என்று கூறியுள்ளது, சபையாருக் ...ப்பட்ட அவரது வைராக்கியத்தை ... சுட்டுகின்றது.

அன்பானவர்களே! பொதுவாக, ...டைய திராட்சப் பண்ணையில் ஊழியஞ் ... ஒரு அநுபவமாயிருப்பினும், ...க் கிறிஸ்தவ வாழ்வில் தேவனுடைய ... வளராத தேவபிள்ளைகளுக்காகப் ...தோடு தேவசமுகத்தில் மன்றாடுவது, ...ன்னதோர் அநுபவமாகும்.

"...தம்முடைய சகோதரியைக் கேட்கும் ..." (வசனம் 8):

இது விவாக நியமன நாளைக் ...டுகின்றது. பொதுவாக, விவாக நிச்சய ...று வேதத்திலிருந்து பல முக்கியக் ...க்களை எடுத்துக்காட்டி, அவ்விதப் ...ளை மணமகளாக நியமிக்கப்பட்டப் ...க்கொள்ளும்படி போதிப்பது இயல்பு. ... ஆட்டுக்குட்டியானவரின் கலியாண ...க நியமிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்து, அவரது பண்புகளை ஏற்று, வாழுவோம்.

"நீர் சுதந்தரவாளி" (ரூத் 3:9) என்று போவாசை நோக்கி ரூத் கூறியுள்ளதை, அவளது சரித்திரத்தில் காணலாம். அதற்குப் போவாஸ், *"உன் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும் உன் பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது... நீ குணசாலி"* என்று அவளை மெச்சிப் பாராட்டினான். அவளுடைய தகுதிகளே அவளைப் போவாசின் மனைவியாகும்படி செய்தது. போவாஸ் நமது பரம மணவாளனான இயேசு கிறிஸ்துவுக்கு நிழலாட்டமாய் உள்ளானன்றோ?

"நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால்..." (2 கொரி.11:2) என்றுள்ள வசனத்தின்படி, நாம் நமது பரம மணவாளனான இயேசுவைத் திருமணம் செய்துகொள்ளும்படியாக, இவ்வுலகில் நியமிக்கப் பட்டிருக்கிறோம். ரூத் தனது விவாக நாளுக்கு ஆயத்தப்பட்டிருந்தது போல, நாமும் நமது ஆட்டுக்குட்டியானவரின் கலியாண நாளுக்கேற்ற குணநலன்களைப் பெற்று வாழ, ஆயத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதை அறிவோமாக.

"அவள் ஒரு மதிலானால், அதின்மேல் வெள்ளிக்கோட்டையைக் கட்டுவோம்" (உன்.8:9);

நேசரின் அன்பில் வளர்ச்சிபெறாத தன் சிறிய சகோதரியைக்குறித்து, மணவாட்டி மணவாளனிடம் கேள்வி கேட்க, அவர் அதற்குரிய பதிலை அவளிடம் கூறியதை மேற்காணும் வசனத்தில் காணலாம். ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடைந்து, தேவ பிள்ளைகள் ஒரு மதிலைப்போல் காணப்பட்டால், *"அதின்மேல் வெள்ளிக்கோட்டையைக் கட்டலாம்"* என்றார் மணவாளன்.

"... பெலனான நகரம் நமக்கு உண்டு; இரட்சிப்பையே அதற்கு மதிலும் அரணுமாக

ஏற்படுத்துவார்" (ஏசாயா 26:1).

'மதில்' என்பது உலக ஆசாபாசங்களினின்றும், உலக அசுத்தங்களினின்றும் பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கையைக் குறிக்கிறது. *'இரட்சிப்பென்னும் மதில்'* என்று, மேற்கூறப்பட்ட வசனத்தில் காண்பது, இயேசுவோடு இணைந்துவிட்ட வாழ்க்கையைப் பொருள்படுத்துகின்றது. கர்த்தருடைய பிள்ளைகள் இவ்வுலக அசுத்தங்களுக்கு விலகி, பரிசுத்த வாழ்க்கையை வாழவேண்டும். தேவனுக்குப் பிரியமில்லாத யாதொன்றும் அவர்களில் காணப்படக்கூடாது. அவர்கள் உறுதியான மதிலைப்போன்று (பிரிந்து வாழ்ந்து) காணப்படவேண்டும்.

"அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்" (எபே.2:20).

மூலைக்கல்லாகிய கிறிஸ்துவின் மேலும், அப்போஸ்தலரது உபதேசமாகிய அஸ்திபாரத்தின்மேலும் விசுவாசிகள் கட்டப்பட்டிருந்தால் மட்டுமே, அவர்கள்மீது மாளிகை முழுவதும் இசைவாய்க் கட்டப்படமுடியும். தன்னுடைய சிறிய சகோதரியைக்குறித்து அதாவது, தேவ அன்பில் வளராத தேவபிள்ளைகளைக்குறித்துக் கேள்வி எழுப்பின மணவாட்டிக்கு, மணவாளன் கூறிய பதில்தான் என்ன?

அவள் இயேசுவாகிய மூலைக்கல்லின் மீது, அப்போஸ்தலரது உபதேசங்களில் அஸ்திபாரமிடப்பட்டு, வளர்ந்து காணப்படும் ஒரு மதிலாயிருந்தால்மட்டுமே, அவள்மீது ஒரு வெள்ளிக்கோட்டையைக் கட்டமுடியும்; அப்போதுதான் அவள் மாளிகையாகக் கட்டப்பட்டு ஒரு வாசஸ்தலமாக எழும்புவாள் என்றார்.

"வெள்ளிக் கோட்டையைக் கட்டுவோம்" (வசனம் 9);

'வெள்ளி' என்பது பழைய ஏற்பா[illegible] காலத்தின்படி, மீட்பைக் குறிக்கிறது. அ[illegible] ஒவ்வொருவரும் குறிப்பிட்ட [illegible] வெள்ளியைச் செலுத்தி, தங்கள் மீ[illegible] பெறவேண்டும். புதிய ஏற்பாட்டுக் கா[illegible] வாழும் நாம், வெள்ளியினாலும் பொ[illegible]னாலும் மீட்கப்படாமல், ஆட்டுக்கு[illegible] கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இ[illegible]தினால் மீட்கப்பட்டிருக்கிறோம் (1 பே. 1:19). இலவசமான பாவமன்னிப்பைப் [illegible] இரட்சிக்கப் பட்டுள்ளோம்.

மீட்கப்பட்ட தேவபிள்ளைகள்[illegible] அவர்மேல் கோட்டையாக—மாளிகை[illegible] கட்டப்படுவர். அப்போது அ[illegible] தேவனுடைய வாசஸ்தலமாகக் காண[illegible] தேவ அன்பில் வளர்ச்சிபெறாத, [illegible] சகோதரிக்கு ஒப்பானவர், இயே[illegible] இரத்தத்தால் . கழுவப்படவே[illegible] மீட்பைப்பெற்று, பிரிந்து வாழவே[illegible] அப்போது அவர்கள் கோட்டை[illegible] ஆவிக்குரிய மாளிகையாக—கட்டப்ப[illegible]

"அவள் கதவானால், கேதுருப்ப[illegible]களை அதற்கு இணைப்போம்" (வசனம் [illegible]

'கதவு' என்பது சாட்[illegible] வாழ்க்கையைக் குறிக்கிறது. கதவு வீட்[illegible] மனிதர் வருவதற்கு ஓர் அழை[illegible] வழியாகும். சிறிய சகோதரி, தன் வா[illegible] மற்றவர்கள் சத்தியத்தை அ[illegible] அறிவிற்குள் அழைக்கக்கூடியவ[illegible] அவ்விதச் சாட்சியைப் பெற்ற[illegible] விளங்கவேண்டும் என்று மணவ[illegible] விரும்பினார். இயேசுவின்மீ[illegible] அன்பினால் விசுவாசிகள் சாட்[illegible] வாழ்வேண்டும்.

"அவர் ரூபம் லீபனோனைப் போ[illegible] கேதுருக்களைப் போலவும் சிறப்பாயிருக்[illegible] (உன்.5:15).

மணவாளனாகிய இயேசு [illegible] மாத்திற்கொப்பான அழகு பொருந்திய[illegible] மேன்மையுடையவராய்க் காணப்ப[illegible]

கேதுருப்பலகைகளை அதற்கு இணைப்போம்" அதாவது, ஆவிக்குரிய தேர்ச்சியில் குன்றியவர் களையும் தம் மணவாட்டிக்கு ஏற்ற நிலையில் மாற்ற இயலும் என்றார் நேசர். ஆனால், ஆவிக்குரிய நிபந்தனைகளை அவள் நிறைவேற்றவேண்டும் என்றும் விரும்பினார். அதாவது, அவள் வெள்ளிக் கோட்டையைப் போன்று, பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து, தம்முடைய அழகிய சாயலை, முத்தைப் பெற்று சாட்சியாய் வாழவேண்டும் என்று கூறினார்.

மணவாளனும், மணவாட்டியும் இணைந்து, தங்களது சகோதரியைக்குறித்துச் சிந்திப்பது இவ்வசனத்தின் சிறப்பு அம்சமாகும். **ஆம், விசுவாசிகளாகிய நாம், ஆண்டவராகிய இயேசுவோடு இணைந்து, ஆவிக்குரிய அன்பில் தேர்ச்சி குன்றியவர்களைக் குறித்துக் கரிசனைகொள்வோமானால், அவர்களையும் கிறிஸ்துவின் சாயலுக்குள் கொண்டுவரமுடியும் என்பதை இதனால் அறிகிறோம்.**

(தொடரும்)

பெண்கள் பகுதி

கிழியுண்ட திரை

குல்ஷான் எஸ்தர்

மறுபடியும் இக்காரியத்தை நான் யோசித்துப் பார்த்தபோது, வித்தியாசமாக விதத்தை நோக்கினேன். எப்படியிருந்தாலும் எனது ஆஸ்தியை அவர்கள் எனக்குக் கொடுக்கப் போவதில்லை. நான் அதன் பாரங்களெல்லாம் நீங்கி, சுயாதீனமாக இருக்கப்போகிறேன். என்னுடைய வாழ்நாள் முழுவதும் இந்தக் கண் பார்வையற்றோர் பள்ளியிலேயே ஜீவித்துக் கொண்டு, சபைக்குச் சென்று தேவனை ஆராதித்துக்கொண்டு இருந்தால் போதுமே என்று யோசித்தேன்.

முன்புபோல் முடமான நிலைமையில், பிரயோகமற்ற நிலைமையில், வாதமாக என் கட்டிலில் படுத்திருப்பதைக் காட்டிலும் இந்நிலைமை மேலானதன்றோ என்று எனக்குத் தானே சொல்லிக்கொண்டேன்.

அந்நாள் முழுவதும் இதைக்குறித்து யோசித்து என்ன பதிலை எழுதவேண்டும் என்றும் ஊக்கமாக ஜெபித்தேன். இறுதியாக நான் எழுதிய பதில் இதுவே: "அன்பான சித்தப்பா, தங்கள் கடிதத்தை நான் பெற்றுக் கொண்டேன். தாங்கள் எழுதிய எல்லாக் காரியங்களைக்குறித்தும் நன்றாகவே அறிந்திருக்கிறேன். மிகுந்த மரியாதையோடு நான் தங்களுக்கு ஐந்து குறிப்புகளைமட்டும் எழுத விரும்புகிறேன்.

1. இறைவனை அடையும்படியான நேரானதும் இடுக்கமானதுமான பாதையை நான் கண்டுகொண்டேன். இயேசு சொல்லுகிறார், *"நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப் படுவான். அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்"* (யோவான் 10:9). நாம் எந்தவொரு வீட்டிற்குச் சென்றாலும் வாசல் வழியாகவே அல்லாமல் வேறு வழியாக நாம் பிரவேசிக்கமாட்டோம். தேவனை அடைய ஒரு வாசல் உண்டு. அவ்வாசல் இயேசுவே ஆவார். கிறிஸ்துவின் வழியை ஏற்றுக்கொள்ளா தவர்கள் அந்த வாசற்கதவைத் தட்டமுடியாது. தீர்க்கதரிசிகளே வாயிற்காவலர்கள்.

2. நான் சத்தியத்தை அறிந்து கொண்டேன். *"நான் உங்களுக்குச் சத்தியத்தை சொல்லுகிறபடியினாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை. என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப் படுத்தக் கூடும்?"* (யோவான் 8:45,46).

3. நான் ஜீவனைக் கண்டடைந்தேன். இயேசு சொன்னார், *"நானே உயிர்த்தெழுதலும்*

ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" (யோவான் 11:25).

4. நான் பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொண்டேன்.

5. நான் நித்திய ஜீவனைக் கண்டடைந்தேன். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16).

தாங்கள் என்னை நாஸ்திகப் பெண் என்று அழைக்கிறீர்கள். அதை நான் கண்டு கொண்ட இந்த ஐந்து காரியங்கள்மூலமாக தயவுசெய்து வந்து எனக்கு நிரூபியுங்கள். ஒன்று, தாங்கள் அதை நிரூபிக்கவேண்டும். இல்லாவிடில் என்னை நாஸ்திகப் பெண் என்று அழைக்காதபடி ஜாக்கிரதையாக இருங்கள்."

என் ஆஸ்தியைப்பற்றியோ, மற்றக் காரியங்களைப்பற்றியோ நான் எதுவும் குறிப்பிடவில்லை. அந்நாள்முதல் இந்நாள் வரை எனது கடிதத்திற்குச் சித்தப்பாவிடமிருந்து பதில் வரவேயில்லை. இதற்குப் பின்பு பல மாதங்கள் நான் எவ்விதத் தொந்தரவுமின்றி நிம்மதியாக இருந்தேன். ஆனால் என் பதிலைப் பெற்ற சில வாரங்களில் சித்தப்பாவும் சித்தியும் தங்கள் உடைமைகளையெல்லாம் சேகரித்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறி கராச்சிக்கோ, லாகூருக்கோ ஓடிவிட்டார்கள். என் வீட்டில் நடந்த குழப்பங்களுக்கெல்லாம் அவர்கள்தான் காரணமென்று சஃப்தர் ஷா கருதியதால், அவரது கோபத்திற்கு அஞ்சி தலைமறைவாயினர்.

டிசம்பர் மாதம் கிறிஸ்துமஸுக்கான குதூகலமான ஏற்பாடுகள் பள்ளியில் நடைபெற்றன. இயேசுவின் பிறப்பைக் கொண்டாடுவது என்பது பலதரப்பட்ட கிறிஸ்தவர்களும் ஒருங்கிணையும் மிக அற்புதமான காட்சி ஆகும். கிறிஸ்துமஸ், தடைச் சுவர்கள் யாவற்றையும் உடைத்து, பெருமகிழ்ச்சி தருகின்றது. பள்ளிப் பிள்ளைகள் வெகு... களைப் பெற்றும் விருந்துண்டும் களி... தார்கள்.

கிறிஸ்துமஸ் கழிந்த ஒரு... நாட்களுக்குள் நான் எதிர்பாராத ஓர் உற... அதிர்ச்சியூட்டும் செய்தியோடு என்... பார்க்கப் பள்ளிக்கு வந்தார். இராவல்பிண்டியிலுள்ள எனது அ... அனீசின் கணவரான பிளண்ட ஷா. அ... குஜராத்தில் சுமார் மூன்று மாதங்களாக... சுகவீனமாக இருந்தாள் என்று கூறி... அவளுக்கு ஏழுமாதத்தில் பிறந்த குழ... இறந்துவிட்டதென்றும், ஆஸ்பத்திரியில்... டாக்டர்களால் அவளது இரத்தப் போ... நிறுத்த முடியவில்லையென்றும் சொன்...

"அனீஸ் மரண அபாயத்தில் இருக்... உன் பெயரையே மறுபடியும் மறுப... உச்சரித்துக்கொண்டேயிருக்கி... இப்பொழுது நீ என்னோடுகூட வரமாட்... அதற்காகக் கார் வெளியே காத்துக்கொண்... கிறது" என்றார். இந்தத் திடீர் அழை... என்னால் மறுக்கமுடியவில்லை. எப்பொழு... மூடப்பட்டுவிட்டது என்று நான் அஞ்சி... இப்பொழுது முழுவதுமாக திறக்கப்பட்ட... கண்டேன்.

எனது அக்காளின் நிலைமை... குறித்துக் கேள்விப்பட்டு அதிர்ச்சியுற்... நான் அவரோடு செல்ல ஆயத்த... இருந்தேன். இருப்பினும் நான் முதல... அனுமதி கேட்கவேண்டுமன்றோ?

நான் அந்த அறையைவிட்டு வெ... சென்றபோது ஒரு குரல் என் காதில் பே... "நீ அங்குச் சென்றடையுமுன்பாகவே... சகோதரி இறந்துவிடுவாள். நீ அ... போவதில் உபயோகம் இல்லை. இயே... பற்றிய காரியங்களை அங்குள்ள... மக்களிடத்தில் பேச அவர்கள் உனக்கு அ... மளிக்கமாட்டார்கள். அதுமட்டுமல்... திரும்பி வராதபடி உன்னைத் த...

...வும் முயற்சிப்பார்கள்.”

இக்குரல் இயேசுவின் குரலல்ல என்று ...கொண்டேன்.

பள்ளியின் முதல்வரைக் காணச் ...முன் நான் என் அறைக்குச் சென்று ...தேன். பதில் தெள்ளத் தெளிவாக ...

“நீ அவளைப் பார்க்கச் செல்லலாம். ... மரிக்கமாட்டாள். நான் அவளை ...டு காத்துக்கொள்ளுவேன்” என்று ... கூறினார்.

நான் இரண்டு நாட்கள் விடுப்புப் ...க்கொண்டேன். எனக்கு அவசியமான பொருட்களை ஒரு பையில் எடுத்துக் ...டு புறப்பட்டேன். மாலை 5 மணிக்குக் காரில் புறப்பட்டு மூன்றுமணி நேர பிரயாணத்துக்குப் பின் நாங்கள் குஜராத்தில் உள்ள அனீசின் வீடு வந்தடைந்தோம். அங்கு மிகச் சோகமான செய்தி எங்களுக்காகக் காத்திருந்தது.

அனீஸ் மரித்துப்போனாள். “அனீசுக்கு அதிகமான இரத்தம் வெளியானதால், அவள் அன்று இரவு 7 மணிக்கெல்லாம் இறந்துவிட்டாள்” என்று டாக்டர் திருமதி. கான் அறிவித்தார்கள்.

என் அக்காளின் சவம் கிடத்தப் பட்டிருந்த அறைக்குள் நான் சென்றேன். அனீசின் முகமெல்லாம் வெளிறிப்போய் உதடுகளெல்லாம் நீலமாக மாறியிருந்தன. அனீசின் கணவர் துயரத்தால் அழுதார்.

(தொடரும்)



Cross-centred Christianity for the youth

“God forlid that I should glory, save ...the cross of our Lord Jesus Christ” (...latians 6:14).

Paul’s ground for boasting is not in ...flesh of men, but in the cross of our Lord ...Christ. On that cross the world died to ...and Paul, to the world. When a man is ...d, the world says good-bye to him and ...s good-bye to the world. The man who ...ved is no longer interested in its fleet- ...pleasures. The world has lost attraction ...m because he has found One who com- ...ly satisfies him. The cross is the divid- ...line between the world and the child of ...

Youths need to be on their guard, lest they enter upon a way of life which claims to be Christian, but ignores the cross or moves it out of the centre. That is only a false sense of Christianity though it may take cover under the Christian profession. Modern culture and meaningless trend of thought coupled with the nauseating devices such as the cell, internet are employed to lure the youth into the acceptance of this false way of life. By choosing the false way of life, young people reject God’s way of life, and their choice proves to be detrimental to spiritual growth.

Let me give a few guidelines which will enable the youth to cling to cross-centred Christianity.

Guideline No.1

The youth must always remember that the cross introduced Christianity to the world and that the cross planted Christianity in the world. To think of Christianity devoid of the cross is like putting the cart before the horse. True Christianity will forever be centred in the cross. I Corinthians 1:18 says, *"For the preaching of the cross is to them that perish foolishness; but unto us which are saved it is the power of God."* The preaching of the cross is the message about Jesus' atoning death in its effect on man. Paul singles out two groups; those who perish deem the word of the cross foolishness. But to the saved, the simple message of the cross is the power of God. Wherever the cross is left out, there remains only a pagan religion. Whenever the cross is moved out of the centre, only a distorted interpretation of Christianity is left, bringing disgrace to Almighty God.

Guideline No.2

The cross represents the fact namely God's dealing with man. The invisible truth is that Jesus thought it not robbery to be equal with God, stripped Himself of glory and came down to meet man sunk in the miry clay of sin. I Peter 2:24 cites: *"Who his own self bare our sins in his own body on the tree, that we, being dead to sins, should live unto righteousness: by whose stripes ye were healed."* Jesus Christ, Himself God and man, through His atoning death on the cross, has intervened in behalf of man, settled all his accounts and provided him with a capital investment of divine grace. Atonement is linked with death, represented by shed-blood; it would become effective in the coveri human sin. I John 1:7 says, *"... the blo Jesus Christ his Son cleanseth us fron sin."* Jesus' violent death on the cross, w is what blood signifies, is the initial anti for ultimate defence against sin's powe presence.

Guideline No.3

Youths who are gripped by a cr centred Christianity, will be inspired to m the cross exert its blessed influence on b ness, politics, professional life, science, social relations, yea-every realm of People who are frustrated in different w of life, will find satisfaction, succour strength in the cross-centred Christia They will undoubtedly feel the impact of uplift of Christ crucified. John 12:31 s *"Now is the judgment of this world: shall the prince of this world be cast o* Who is the prince of this world who is out? The prince of the world is, *"the go this world who hath blinded the mind them which believe not, lest the light of glorious gospel of Christ, who is the age of God, should shine unto them"* Corinthians 4:4). John 12:32 renders t *"And I, if I be lifted up from the earth, draw all men unto me."* Youths with cross central in their own lives, will be c lenged to give themselves sacrificially Christ, so as to make the cross centr human society.

Only the cross-centred Christi will guard the youth against falling into attractions and allurements of the w system.

சிறுவர் பகுதி

ஆபத்திலிருந்து தப்புவிக்கும் தேவன்

"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்" (சங்கீதம் 46:1).

கிறிஸ்துவுக்குள் அன்பான என் அருமை பிள்ளைகளே! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். கோடை விடுமுறையில் என்னென்ன செய்யப்போகிறீர்கள் என்று தீர்மானித்துவிட்டீர்களா? ஒருவேளை நீங்கள் அருகாமையிலுள்ள இடங்களுக்குப் போகத் தீர்மானித்திருக்கலாம். இன்றேல், தூரத்திலுள்ள இடங்களுக்குச் செல்லவும் தீர்மானித்திருக்கலாம். அப்பிரயாணத்தில் எதிர்பாரா ஆபத்துக்கள் நேரிடின் என்ன செய்வீர்கள்? அதுகுறித்துக் கூறும் கதை விளக்குகின்றது. வாசிப்பீர்களாக.

"பால்! நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்? நாம் புறப்படுமுன்பாக நீ ஏதோ ஒன்றைச் செய்யவேண்டுமென்று சொன்னேனே, அதைச் செய்தாயா?! என்று கேட்டார்கள் பாலின் அம்மா.

"அம்மா! மன்னித்துக்கொள்ளுங்கள். இதோ இன்னுமொருமுறை படித்துவிட்டு, நாற்பத்தி ஆறாம் சங்கீதம் முழுவதையும் ஒப்புவித்துவிடுகிறேன்" என்று சொல்லி, தன் வேதாகமத்தை வேகமாகத் திருப்பினான்.

அவன் சொன்னபடியே ஐந்து நிமிடத்தில் முழுச் சங்கீதத்தையும் தவறில்லாமல் ஒப்புவித்தான். அவனை மெச்சிக்கொண்ட அவன் தாயார் அந்தச் சங்கீதத்தை என்றைக்கும் மறவாமல் இருக்கவேண்டும் என்று ஆலோசனை கூறினார்கள்.

பெங்களூரு, மைசூர், மூணார் போன்ற இடங்களுக்குச் சுற்றுலாப் பயணம் செல்ல, சுற்றுலாப் பயணக் குழுவோடு, பாலின் குடும்பத்தாரும் சேர்ந்துகொண்டனர். தங்களுடைய தாமதமான முடிவினால், இரயிலில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. பால் மிகவும் ஆவலோடு பயணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். வியர்வையின்றி, குளுகுளு என்று குளிர்சாதனப் பேருந்தில் செல்லப்போவதைக் கற்பனை செய்து மகிழ்ந்துகொண்டிருந்தான். பேருந்து நிலையத்தை அடைந்து, தங்கள் பேருந்தைக் கண்டுபிடித்து, இருக்கைகளைத் தேடி அமர்ந்தனர். அங்கு வந்திருந்த அத்துணைச் சிறுவர்களின் முகத்திலும் மகிழ்ச்சி. குறித்த நேரத்தில் பேருந்து புறப்பட்டது. இரவு பயணமானதால் சிறிது நேரத்திற்குப் பின்னர் ஓட்டுனர் விளக்குகளை அணைத்தார். அனைவரும் தங்கள் இருக்கைகளில் சாய்ந்தனர்.

பாலும் தன் இருக்கையில் சாய்ந்து, தன் கண்களை மூடினான். அவன் இருதயமோ அன்று அவன் படித்த சங்கீதத்தைத் தியானித்துக்கொண்டிருந்தது. திரும்பவும் அந்தச் சங்கீதத்தின் முதல் வசனமாகிய, *"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்"* என்பதைத் தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் அந்த எட்டு வயது சிறுவனான பால்.

சாலையில் நேராகச் சென்றுகொண்டிருந்த பேருந்து, திடீரென்று ஓட்டுநரின் கட்டுப்பாட்டை மீறி, தாறுமாறாகச் செல்ல ஆரம்பித்தது. நடத்துனர் எவ்வளவோ குரலெழுப்பியும் ஒருவரையும் கட்டுப்படுத்த இயலவில்லை. அநேகர் பயத்தில் உறைந்து, செய்வதறியாத சிலையென நின்றனர். சிலர் தங்கள் குரலை உயர்த்தி ஓட்டுநரையும்

நடத்துநரையும் வசைபாடினர். ஒருசிலர், இங்கும் அங்கும் ஓட ஆரம்பித்தனர். ஆனால் பாலின் குடும்பத்தார் அமைதியாக ஜெபித்துக் கொண்டிருந்தனர்.

இதற்கிடையில் சாலையில் போய்க் கொண்டிருக்கும் மற்ற வாகனங்களின்மேல் இடித்துவிடாமல், சாலையைவிட்டுப் பக்க வாட்டில் பேருந்தை இறக்க ஓட்டுநர் பிரயாசப்பட்டு, ஒருவாறாகக் கட்டுக்குள் கொண்டுவந்தார். பேருந்தும் தன் வேகத்தை இழந்து, மெதுவாக நின்றது. உடனே கதவைத் திறந்துகொண்டு அனைவரும் இறங்க முயற்சித்தனர். ஆனால் கதவைத் திறந்த பொழுது தண்ணீர் உள்ளே வந்ததைக் கண்ட அனைவரும் திகைத்து நின்றனர். இருள் சூழ்ந்திருந்த இடமானதால் செய்வதறியாது திகைத்தனர்.

பேருந்தின் நிலைமையைக் கண்ட அநேகர் அவ்விடத்திற்கு வந்து உதவ முற்பட்டனர். பேருந்து ஒரு வயலில் இறங்கியிருந்ததால் தண்ணீர் உள்ளே வருவதை அறிந்து, பெருமூச்சுவிட்டனர். பயணிகள் ஒவ்வொருவராக வெளியேறினர். வெளியே வந்த பாலின் பெற்றோர் அவனைத் தேடினர். ஆனால் அவனைக் காணவில்லை.

உதவிசெய்ய வந்த ஒருவர் அவனைத் தேட, பேருந்திற்குள் ஏறினார். பெட்டிகளும் படுக்கைகளும் சிதறிக்கிடந்தன. அவரோ, "பால், பால்! நீ எங்கு இருக்கிறாய்?" என்று கூப்பிட்டார்.

அப்பொழுது முனகல் சத்தம் கேட்கவே, அங்குச் சென்றார். பெட்டிகள், படுக்கைகள், உடைந்த பொருட்கள் போன்ற வற்றை அப்புறப்படுத்தினபோது, பால் அடியில் படுத்திருந்தான். என்ன ஆச்சரியம்! அவனுக்கு எந்தக் காயமும் ஏற்படவேயில்லை.

அவனைக்கொண்டுவந்து, பெற்றோரிடம் சேர்த்தார் உதவியாளர். அவனைக் காயமில்லாமல் காப்பாற்றிய தேவனைத் துதித்தனர்.

அவன் அம்மா, "பால், உனக்குக் ஏதுமில்லையே. உன்மேலே அ பொருட்கள் இருந்ததாக உதவி கூறினாரே" என்று கேட்டார்கள்.

"அம்மா, '*தேவன் நமக்கு அடைக் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூல துணையுமானவர்*' என்ற வசனத்தை வி நடந்தபொழுது என் இருதயத்தில் சொ கொண்டேயிருந்தேன். தேவன் என்னை சேதமுமில்லாமல் காப்பாற்றினார்" என்ற

அவன் பெற்றோரும் அவனோடு சேர்ந்து தேவனுக்கு நன்றிசெலுத்தினர்.

அன் அருமைப் பிள்ளைக ஒருவேளை ஆபத்தான சூழ்நிலையில் சி கொள்ளுவீர்களானால், பயப்படவேண் வேத வசனத்தை உறுதியாகப் பிடி கொள்ளுங்கள். அப்பொழுது தேவன் உங் நிச்சயமாகவே விடுவித்துக் காப்பார்.



சாட்சிப்பகுதி

இயேசு என்னைத் தொட்டார்

நான் என் இளம்பிராயத்திலிருந்தே ...ம் வியாதிப்பட்டு, பெலவீனத்துட...ந்தேன். எனக்கு ஒரு தெய்வீகத் தொடுதல் ...வைப்பட்டது. அநேக ஆலயங்களுக்குச் ...று. என் சுகத்திற்காக ஜெபித்தும் ...யோஜனமில்லை. சோர்வுற்று, தேவனை ...க முயன்றேன். என் நண்பர்கள் என்னை ...மலர்ச்சிக் கூட்டங்களுக்கு அழைத்தனர். ...னா போக விரும்பவில்லை.

ஒரு சமயம் ஒரு தெலுங்கு புதிய ...ட்டைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் ...ற்று. நான் அதை வாசித்து இயேசுவையும் ... போதனைகளையும் அறிந்துகொண்டேன்.

ஒரு இரவு நான் அமைதி இழந்தவனாக, ...கமுடியாமல் தவித்துக் கொண்டிருந்த ... ஒரு தரிசனங் கண்டேன். என் இருதயம் ...ளடைந்திருந்தது. சாத்தான் அதில் ...சனம் போட்டு, அமர்ந்திருந்தான். அவன் ...பாக, இரு கொம்புகளைத் தலையி...டையவனாக இருந்தான். அவனுடைய ...மைகளுக்கு அவன் கட்டளை கொடுத்துக் ...ண்டிருந்தான். அவைகளும் அங்குமிங்கும் ...லைத்து, அவன் கட்டளைகளை நிறை...றிக் கொண்டிருந்தன. என் இருதயத்தை ...ன் சங்கிலிகளினால் கட்டி வைத்திருந்தான்.

அப்பொழுது சில தேவதூதர்கள் தங்கள் ...யில் வாளுடன் வந்து, சாத்தானை என் ...தயத்திலிருந்து விரட்டியடித்தனர். நான் ...தபோது ஒரு பெரிய வெளிச்சம் என் ...யத்தில் பிரகாசித்தது. இயேசு என்னைத் ...டு, "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. ... பாவஞ்செய்யாதே. நீ மறுபடியும் ...ஞ்செய்தால் நான் உன்னுடனிருக்க ...து" என்றார். அவரது இருபுறமும் தேவதூதர்கள் துதிபாடல்கள் பாட, அவர் சென்றுவிட்டார்.

நான் மறுபடியும் பிறக்க இயேசுவின் புதிய ஏற்பாட்டுப் புத்தகம் உதவியது. துதி, கனம், மகிமை இயேசுவுக்கே.

M. Jeremiah, Lutheran Model High School

அற்புத சுகம் பெற்றேன்

என் பெயர் யோசுவா. நான் மாதவரத்தில் வசித்துவருகிறேன். அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபையில் அங்கம் வகித்துவருகிறேன். கடந்த அறுபது ஆண்டுகளாக எனது காதில் ஒரு சத்தத்துடன் கூடிய வலி இருந்துவந்தது. எத்தனையோ வைத்தியம் செய்தும் அது என்னைவிட்டு அகலாதிருந்ததால் மரணபரியந்தம் இந்தத் துன்பத்தோடுதான் வாழவேண்டுமா என்று, நான் மனம் நொந்தவனாய் வாழ்ந்துவந்தேன்.

25.2.2011 அன்று, இரவு 10 மணிக்கு நமது ஆலயத்தின் சங்கிலித் தொடர் ஜெபத்தில் கலந்துகொண்டேன். நான் அன்று அழுது ஜெபித்துக்கொண்டிருந்தபோது, பரிசுத்த ஆவியானவர் எனது காதைத் தொட்டது போலுள்ள ஓர் உணர்வு எனக்குள் ஏற்பட்டது. அந்நேரத்தில் எனது காதிலிருந்து பயங்கரமான சத்தம் நீங்குவதையும் உணர்ந்தேன்.

அன்று இரவு நித்திரை தெளிந்து, மறுநாள் காலை எழுந்தபோது நான் பரிபூரண சுகம் பெற்றவனாகக் காணப்பட்டேன். அறுபது ஆண்டுகளின் வேதனையிலிருந்து, தெய்வீக சுகம் அளித்த தேவாதி தேவனுக்குக் கோடானகோடி ஸ்தோத்திரம் உண்டாவதாக.

R. யோசுவா
M.M.C. காலனி,
மாதவரம், சென்னை-51.

சபையின் செய்திகள்

2011, செப்டம்பத் திங்கள் 5 ஆம் நாள் காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபையில் ஊழியஞ் செய்யும் சகோதரிகளும் அதன் ஐக்கியத்தில் உள்ள ஏனைய சபைப் போதகமார்களின் துணைவியரும் இணைந்து, தலைமைச் சபை வளாகத்தில் கூடினர்.

போதகர் தாமஸ்ராஜ் அவர்களின் துதி ஆராதனைக்குப் பின்னர், தலைமைப்போதகர் எம்.கே. சாம் சுந்தரம் அவர்கள், லூக்கா 1:28 ஐ மையமாகக்கொண்டு, "மரியாள் ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள்" என்றுள்ள தலைப்பில், மரியாளின் ஏழு குணநலன்களைக்குறித்துப் போதித்தார்.

அவள் தேவ கிருபை பெற்றவள் (லூக்கா 1:28); தேவனோடு ஐக்கியங் கொண்டிருந்தவள் (லூக்கா 1:28); தேவனுடைய வாக்குத்தத்தங்களை மனதில் வைத்துத் தியானித்தவள் (லூக்கா 1:29); தேவபெலனைப் பெற்றவள் (லூக்கா 1:35); தேவனுக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினவள் (லூக்கா 1:38); தேவபிள்ளைகள்மீது அன்புகொண்டிருந்தவள் (லூக்கா 1:40); தேவனை நன்றியுள்ளத்தோடு துதித்தவள் (லூக்கா 1:46-55) என்று, அழகுற எடுத்துரைத்தார்.

தலைமைப்போதகரின் ஆசீர்வாத ஜெபத்திற்குப் பின்னர், மதிய உணவு வழங்கப்பட்டு, கூட்டம் நலமுடன் முடிந்தது.



NEWS

சேவை திருப்தியளிக்காவிட்டால் ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனத்தை 7 நாட்களில் மாற்றிக்கொள்ளலாம்

தனியார் நிறுவனங்களின் சேவை
தரத்தை உயர்த்த, மத்திய அரசு அமைப்
தொடர்ந்து புதிய வசதிகளை வாடிக்கைய
களுக்கு அறிமுகம் செய்துவருகின்
செல்போன் எண்ணை மாற்றாமலே
சேவை நிறுவனத்தை மாற்றும் திட்டத்
மக்களிடம் அமோக வரவேற்பு கிடைத்துள்
இதையடுத்து, தனியார் மருத்துவ இன்சூர
நிறுவனங்களின் சேவையின் குறைபா
பற்றி பாலிசிதாரர்களிடம் இருந்து இன்சூர
ஒழுங்குமுறை ஆணையத்துக்கு (ஐ.ஆர்.
அதிக அளவில் புகார்கள் வந்தன. சே
குறைபாடுள்ள நிறுவனங்களுக்குப் பலமு
ஐ.ஆர்.டி.ஏ. எச்சரித்தும் புகார்கள் நீடிக்கின்
எனவே, ஒரே பாலிசியில் வேறு இன்சூர
நிறுவனத்தில் வசதியிருந்தால், நிறுவ
களின் சேவைத்தரம் உயரும் என்று மு
செய்யப்பட்டது.

அதன்படி, ஒரே பாலிசியை
நிறுவனத்துக்கு மாற்றிக்கொள்ளும்
அக்டோபர் முதலாம் தேதி அறிமுகமா
ஐ.ஆர்.டி.ஏ. அறிவித்தது. இதற்கான இ
விதிமுறைகள், மாறும் வழிமுறைக
சற்றறிக்கையாக இன்சூரன்ஸ் நிறுவ
களுக்கு ஐ.ஆர்.டி.ஏ. அனுப்பியுள்ளது.

அதன்படி, நிறுவனம் மாற விரு
பாலிசிதாரர், காலாவதி தேதிக்குக் குறை
45 நாட்கள் முன்னதாக, பழைய நிறுவனத்
விண்ணப்பிக்கவேண்டும். அவரது கண
போனஸ் இருந்தாலும், அது
நிறுவனத்துக்கு மாற்றப்பட்டு, நீடிக்கும்.

(தினகரன் 15-09-2

இயேசுவின் வருகைக்காக விழித்திரு

இயேசு கூறுகிறார்:

"வேலை முடிந்த ஒருநாளின் மாலையில்,
அந்திவேளையின் மங்கலான ஒளியில் நீஅமர்ந்து,
மறையும் சூரியனையும், ஒளிமயமான நீண்ட நாள்
மெல்லக் கடலில் மறைவதையும் காண்கையில்,
என் நினைவுகளால் அமைதியும் தூய்மையும் நிறைந்த அந்நேரம்,
கிராமத்துச் சிறுவர்கள் தெருவில் நடந்து செல்கையில்
ஒலிக்கும் அவர்கள் பாத ஓசையுடன்
என் பாத ஓசையையும் நீகேட்கக்கூடும்.
ஆதலால் நான் கூறுகிறேன், விழித்திரு.
மாலை வெள்ளியின் ஒளியால் தூரத்து மேகங்கள்போல
அறையானது இருளடையத் துவங்கும்போது,
உன் வீட்டுக் கதவு தாழிடப்படாதிருக்கட்டும்.
ஏனெனில், ஒருவேளை ஒளி மங்கும் மாலைவேளையில்
நான் வருவேன்;
விழித்திரு."

Reg.Number TN/CCN/385/09-11. Licence to the post under WPP No.TN.CCN.85/09-11
Regd.Under Regis.of News paper for India No. 1295/57, Posting date 29th & 30th of every m
Date of Publication: monthly, 15th of every month.
Posted at RMS/1 Patrica Channel, Egmore, Chennai - 600 008.

Book - Rs.5/-

1. உங்கள்மீதுள்ள அபிஷேகம்
2. விசுவாசிகளின் சாட்சி
3. சாட்சிகள் 60
4. உத்தம சாட்சிகள்
5. எஸ்தர்
6. ஒளி வீசும் சாட்சிகள்
7. இரயில் நிலையத்தில் இயேசு என்னைக் குணமாக்கினார்
8. இயேசு செய்த அற்புதங்கள் (சாட்சிகள்)
9. Jesus met me in jail
10. My experiences

Book - Rs.10/-

11. பக்திவிருத்தி உண்டாக்கும் சாட்சிகள்
12. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம்
13. கிறிஸ்துமஸ் செய்திகள்
14. இயேசு உயிர்த்தெழுந்தார்
15. நீதியின் சூரியன்
16. பரதேசிகளாகிய நாம்
17. கிறிஸ்தவக் குடும்பம்
18. நித்திய பிரதான ஆசாரியர்
19. சபை சபைதானா?
20. யாக்கோபிலிருந்து உதிக்கும் நட்சத்திரம்
21. சிலுவைக்கு அப்பால்
22. வணக்கம்
23. இரட்சிப்பின் சாட்சிகள்
24. ஜீவனுள்ள சாட்சிகள்
25. அற்புத சாட்சிகள்
26. சாட்சிகள்
27. எரி நரகத்திற்குத் தப்பினேன்
28. நன்றியுள்ள சாட்சிகள்
29. கல்லூரியில் அற்புதங்கள்
30. நற்செய்தி கதைகள்
31. தீப ஒளி
32. வழிக்காட்டும் கதைகள்
33. அந்தக் கடிதங்கள்
34. அந்த மயில்கள்
35. கனமான ஊழியம்
36. வெளிச்சம்
37. ஆத்தும நேசர்
38. ஐக்கியம்
39. கொடி
40. இன்னும் சந்தேகமா?
41. கர்த்தருடைய பிள்ளைகள் அனுதினம் அறிக்கை செய்யவேண்டியவை
42. கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள்
43. பேசும் தெய்வம்
44. முதலாம் ஆதாம்
45. ஆசீர்வாதங்களின் திறவுகோல்.
46. நீரே என் மேய்ப்பர்
47. தேவ ஊழியம்
48. Eternal grace
49. The Star
50. The new year
51. Spiritual questions
52. The timely warning
53. The blessing
54. Your response to the Cross
55. The power of prayer
56. Springs in the valley
57. A narrow escape from hell

Book - Rs.15/-

58. இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாவோம்
59. இயேசு கூறின உவமைகள்
60. அதிசயமான தேவ கிருபை
61. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம்-4

Book - Rs.20/-

62. வாக்குத்தத்தச் செய்திகள் 2004
63. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம்-1
64. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம்-2
65. ஆவிக்குரிய கிறிஸ்தவர்களின் வாழ்க்கை
66. நம்மை ஆசீர்வதித்து நட... கர்த்தர்
67. புகழ்பெற்று விளங்கிய தே... பெண்கள்-1
68. புகழ்பெற்று விளங்கிய தே... பெண்கள்-2
69. ஒருவருக்கொருவர்
70. கர்த்தருக்குப் பரிசுத்தம்
71. Successful ministers of ...
72. Messages of God's bless...
73. Messages of God's bless...

Book - Rs.25/-

74. A good soldier of Jesus C...
75. வாக்குத்தத்தச் செய்திகள்...
76. வாக்குத்தத்தச் செய்திகள்...
77. வாக்குத்தத்தச் செய்திகள்...
78. வாக்குத்தத்தச் செய்திகள்...
79. வாக்குத்தத்தச் செய்திகள்...
80. வாக்குத்தத்தச் செய்திகள்...
81. வேத ஒழுங்கின்படி தே...
82. வேத ஒழுங்கின்படி தே...
83. தேவனுடைய ஆசீர்வா... பெற்றுக்கொள்ளுங்கள்
84. ஜெபத்தின் வல்லமை

Book-Rs.30/-

85. நல்ல போர்ச்சேவகன்
86. ஆவிக்குரிய தேவசெய்தி...
87. வேதாகமத்திலிருந்து எடு... முத்துக்கள் (பகுதி-1)
88. Gleanings from the Bible

Book-Rs.100

87. உன்னதப்பாட்டு (வேதப...
88. வெளிப்படுத்தின விசே... (வேத...
89. The Revelation (Bible St...

வேண்டுவோர் விரும்பும் நூல்களை எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி.

24 Hrs. Prayer Line
26625815

Herald of Deliverance

Edited and published by Pastor.M.K.Sam Sundaram on behalf of ACA Literature Ministry
111, Brick kiln Road, Purasawalkam, Chennai -600007.
Phone: 26622775 Website: www.acalivechurch.org

Administrative office: ACA Literature Ministry, Post Box No.3504, Chennai -600007.
Phone: 26622021 e-mail: acalm@acalivechurch.org
Printed by :Devadas, Lord Printers, 71/A Gangaiamman Koil Street,
Vadapalani, Chennai -600 026. Phone: 24726885/Cell:9841429079